# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர்ஆண்டு 2029 தை 27 திங்கட்கிழமை (09-02-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்64


# சந்திரிகா, அனுருத்த உட்பட முக்கிய தலைவர்களின் பாதுகாப்பு அதிகரிப்பு!

## மேலும் பல குண்டுதாரிகள் ஊடுருவல் என அச்சம்

கொழும்பு, பெப்ரவரி 9

கொம்பனித் தெருவில் விமானப்படைத் தளத்துக்கு அருகில் அமைந்திருந்த இராணுவ - விமான கூட்டுச் சோதனை நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தற்கொலைக் குண்டுதாரியின் குண்டு வெடித்ததையடுத்து —

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த உட்பட முக்கிய தலைவர்கள், படைத் தளபதிகள் ஆகியோருக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என்று செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 5 விமானப்படையினர் உட்பட 9 பேர் உயிரிழந்தது தெரிந்ததே.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடத்திய பொலீஸார், விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்கவை இலக்கு வைத்தே தற்கொலைக் குண்டுதாரி வந்ததாகவும் — ஆனால் அதற்கு முன்பே குண்டு வெடித்து விட்டது என்றும் — தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து மேலும் தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்பு நகருக்குள் வந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது- இதனை அடுத்தே முக்கிய தலைவர்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (இ-3-9)

## ரோந்து சென்ற படையினர் மீது மணலாறில் தாக்குதல்!

### நான்கு பேர் உயிரிழந்தனர்

கொழும்பு, பெப். 9

மணலாற்றுப் பகுதியில் உள்ள ஹெலம் பாவேவ என்ற இடத்தில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் நான்கு படையினர் உயிரிழந்தனர்—

படையினர் கால்நடையாக ரோந்து சென்றபோதே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினர் சிறு ஆயுதங்கள் மற்றும் மோட்டார்கள் கொண்டு பதில் தாக்குதல் நடத்தியதாகவும்—

புலிகள் காயமடைந்த அல்லது உயிரிழந்த தமது சகாக்களுடன் அங்கிருந்து பின்வாங்கிச் சென்றதாகவும்— பலாலி இராணுவத் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் நேற்று முன்தினம் காலை 8.45 மணியளவில் மணலாறு சந்தான்குளம் இராணுவ முகாமில் இருந்து ரோந்து சென்று கொண்டிருந்த படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும்—

எதுவித இழப்புக்களும் இன்றி மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் கீழ்க்காணும் ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் ''புலிகளின் குரல்'' தெரிவித்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமத்தில் லொறிகளுக்கு தீவைப்பு

கொழும்பு, பெப். 9

கதிர்காமம் — கல்கே பிரதான வீதியில் நேற்று முன்தினம் இரவு இரு லொறிகள் இனந்தெரியாதவர்களால் தீயிடப்பட்டன என கதிர்காமம் பொலீஸார் தெரிவித்தனர்.

வான் ஒன்றில் அந்தக் கோஷ்டியினர் தப்பிவிட்டதாகவும் —

பொலீஸார் விசாரணைகளை மேற்கொள்ளுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# கிளிநொச்சியின் தெற்குப் பகுதிகள் மீண்டும் படை வசம் என அறிவிப்பு

கொழும்பு, பெப். 9

கடந்த முதலாம் திகதி விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது, விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட கிளிநொச்சி முகாமின் தெற்குப் பகுதி முன்னணிக் காவலரண்கள் மீண்டும் படையினரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் ''லங்காபுவத்''துக்குத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு பலத்த இழப்புக்களை ஏற்படுத்தி இந்த நிலைகளைப் படையினர் மீண்டும் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததாகப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி இராணுவ முகாமின் தெற்குப் பகுதியில் ஊடுருவியிருந்த புலிகளுடன் கடும் சண்டை நடந்தது.

கடும் சண்டையின் பின்னர் அந்தப் பகுதி படையினரின் கட்டுப்பாட்டில் வந்தது.

கிளிநொச்சி இராணுவ முகாமின் தெற்குப் பகுதியில் உள்ள முன்னரங்கப் பகுதியே புலிகளின் பிடியில் இருந்து கைப்பற்றப்பட்டு, தற்சமயம் பலப்படுத்தப்படுகிறது.

இப்படி அந்த இராணுவ அதிகாரி மேலும் கூறினார்.

இந்தச் சண்டைகளில் விடுதலைப் புலிகள் தரப்பில் இதுவரை 450 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் — படையினர் தரப்பில் 75 பேர் உயிரிழந்தனர் என்றும்— படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் கிளிநொச்சி

(10 ஆம் பக்கம் பார்க்க)

### சுற்றிவளைப்பின் போது

## குண்டை வெடிக்கவைத்து 2பேர் மரணம் எனத் தெரிவிப்பு!

யாழ்ப்பாணம், பெப். 9

மீசாலை, சரசாலைப்பகுதிகளைப் படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்திய சமயம், அப்பகுதியில் மறைந்திருந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவர் கைக்குண்டை வெடிக்க வைத்து உயிரை மாய்த்துக் கொண்டனர்

பலாலி இராணுவ தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நீர்வேலி மோதலில் 4 படையினர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 9

கடந்த வெள்ளிக்கிழமை நீர்வேலியில் இடம்பெற்ற மோதலில் நான்கு படையினர் காயமடைந்ததாக பலாலி இராணுவ தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கபட்டுள்ளது.

இந்த மோதலில் கொல்லப்பட்டதாக இரு இளைஞர்களின் சடலங்களை பொலீஸார் யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்று முன்தினம் ஒப்படைத்தது தெரிந்ததே.

படையினர் தேடுதல் நடத்தியபோது ஒரு ரேடியோ செட், சில மருந்துப்பொருள்கள், சில இராணுவ கருவிகள் ஆகியவை கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.(இ)

## பிரேத பரிசோதனையின் போது சடலத்திலிருந்துவிழுந்தபொருள்

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ். ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட சடலம் ஒன்றில் இருந்து வீழ்ந்த மர்மப் பொருளால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

நீர்வேலி, கொடிகாமம் பகுதிகளில் இருந்து 4 இளைஞர்களின் சடலங்களை பொலீஸார் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

நேற்றுக்காலை இந்த சடலங்கள் தொடர்பான பிரேத பரிசோதனை நடைபெற்றது.

பிரேத பரிசோதனையின் போது சட்டவைத்திய அதிகாரி, ஊழியர்கள் மற்றும் பொலீஸார் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

முதலாவது சடலம் மீதான பிரேத பரிசோதனை முடிந்து, 2 ஆவது சடலத்தை பிரேத பரிசோதனை நடத்த சேட்டைக் கழற்றிய போது, மர்மப்பொருள் ஒன்று கீழே

(10 ஆம் பக்கம் பார்க்க)

# படையினர் புதைத்த கண்ணியில் படையினரின் டிராக்டர் சிக்கியது!

### கிளிநொச்சியில் மூவர் பலி; 24 பேர் காயமடைந்தனர்

வவுனியா, பெப். 9

டாங்கி எதிர்ப்பு கண்ணியில் படையினரின் டிராக்டர் ஒன்று சிக்கியது.

கிளிநொச்சியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் டிராக்டரில் பயணம் செய்த படையினரில் மூவர் கொல்லப்பட்டனர். 24 பேர் காயம் அடைந்தனர்.

படையினரால் புதைக்கப்பட்ட கண்ணியிலேயே படையினரின் டிராக்டர் சிக்கியதாக பலாலி இராணுவ தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையினரால் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருந்த வீதி ஒன்றில் இந்த டாங்கி எதிர்ப்பு கண்ணி படையினரால் புதைத்து வைக்கப்பட்டிருந்தது என்றும் —

அந்த [illegible] செல்ல [illegible] தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாணவருக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், பெப் 9

1997 இல் நடைபெற்ற நாடக எழுத்துருவாக்க திறந்த போட்டியில் அகில இலங்கை மட்டத்தில் முதல் பரிசு பெற்ற யூனியன் கல்லூரி மாணவனான பிரவீணன் மகேந்திரராஜாவை பாராட்டி பரிசளிக்கும் விழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது.

இணுவில் கிழக்கு அம்மா அச்சகத்துக்கு அண்மையில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவுக்கு மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தலைமை வகிப்பார். (இ-9)

# மரண அறிவித்தல்கள்

## முத்துவேலு நாகம்மா

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரம் கண்ணகை அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான முத்துவேலு நாகம்மா அவர்கள் 08 - 02 - 1998 இல் சிவனடி எய்திவிட்டார்.

இவர் சின்னட்டியர்முத்துவேலுவின் அன்புமனைவியும், குகானந்தவேல் (ஆசிரியர் Canada), கலைவாணி, கலைமணி (Canada), சண்முகானந்தவேல் (வேல்சாமி Swiss), காலஞ்சென்ற யாழ்மணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவனேசன் (சிவாஸ் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்), பரிமளாதேவி (Colombo), ஜெகநாதன் (Canada), சிவமலர் (Swiss) ஆகியோரின் அருயிர் மாமியாரும், பாலரூபி, கஜேந்திரநாத், பிரியா, யாமினி, ஜனனி, விபுலானந்தி, சஞ்சீவ், சறஞ்சீவ், சஞ்சிகா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 9 - 2 - 98 பி.ப. 2.00 மணி அளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
ஐ. சிவனேசன்
(மருமகன்)
(சிவாஸ் ஸ்ரோர்ஸ்)

''திருத்தணிகை'',
இல. 19, மாட்டின் லேன்,
யாழ்ப்பாணம்.
(சி/2848)

## செந்திவேல் மணியதாஸ்

புத்தூர் சிறுப்பிட்டியைச் சேர்ந்தவரும், புதிய ஜன நாயகக் கட்சியின் பொதுச் செயலாளருமான சி. கா. செந்திவேல் - செல்வராணி ஆகியோரின் மகன் மணியதாஸ் 05-02-98 இல் கொழும்பில் காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திரு. திருமதி சிவபாலன்
(மாமா, அத்தை)

ஆனைக்கோட்டை.
(53240)

## திருமதி G. N. இராசரத்தினம்
### (நேசமணி அக்கா)

திருமதி G. N. இராசரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியை, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) மாசி மாதம் 08 ஆம் திகதி கர்த்தருக்குள் மகிமை அடைந்தார்.

இவர் காலஞ் சென்ற வண. E.D. இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், ஜீவநேசராசதேவி (ஜீவா—ஆசிரியை, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), அமிர்தரட்ணதேவி (சின்னா — இளைப்பாறிய ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இரட்ணபாக்கியதேவி (சுட்டி—ஆசிரியை, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), முத்துரட்ணானந்தன் (பிரதிப் பொது முகாமையாளர், இலங்கை மின்சாரசபை, திருகோணமலை), நேசரட்ணதேவி (தங்கா உப அதிபர், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இரத்தினசபாபதி, மகாரத்தினம், ஜீவனிட்டா (நிரா), ஜோசப் (A. O. பிரதேச செயலகம், கரவெட்டி) ஆகியோரின் நேசமாமியாரும், மில்கா, கொட்வின், நிரேஷ் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்.

இவரின் நல்லடக்க ஆராதனை இன்று (9-2-98) திங்கட்கிழமை மாலை 3-00 மணியளவில் அவரது இல்லத்தில்நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக உடுப்பிட்டி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்வி A. இராசரத்தினம்
(சின்னா)

இமையாணன்,
உடுப்பிட்டி.
(53237)

## பூமாதேவி விநாயகமூர்த்தி

தொல்புரம் பாணாவெட்டியைச் சேர்ந்த திருமதி பூமாதேவி விநாயகமூர்த்தி (இராசாத்தி) இந்தியாவில் 07 - 02 - 1998 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் அம்பலவாணர் விநாயகமூர்த்தியின் (இளைப்பாறிய லிகிதர், குடிவரவு குடியகல்வு திணைக்களம், கொழும்பு), அன்பு மனைவியும், சக்திவேல் (லண்டன்), பாலச்சந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அருள்சோதி, பரஞ்சோதி ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்பு அறிவிக்கப்படும்.

தகவல்:
அ. விநாயகமூர்த்தி
(கணவர்)

பாணாவெட்டி,
தொல்புரம், சுழிபுரம்.
(53213)

## ஒலிப்பதிவு 'நாடா வெளியீட்டு விழா

பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர் இயற்றி, டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் சிவசிதம்பரம் இசையமைத்து கோண்டாவில் வடக்கு அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் பேரில் பாடிய ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை 11 மணிக்கு ஆலய முன்றலில் வ. சந்திரசேகரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வாழ்த்துரையை கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸும், வெளியீட்டுரையை பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயரும் வழங்கவுள்ளார்கள். [இ-8]

## கருத்தரங்கு

ஜி. சீ. ச (உயர்தர) வகுப்பில் கிறிஸ்தவ நாகரிகம் பயிலும் மாணவர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி முதல் 12 மணி வரை சுண்டுக்குளி சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள இறைமக்கள் பயிற்சி நிலையத்தில் நடைபெறும். (இ-3)


**கம்பியூட்டர் றோணியோ**

யாழ் நகரில்
கம்பியூட்டர் ரென்சில் கட்டிங்கில் தமிழ், ஆங்கில
**தட்டச்சு றோணியோ**
வேலைகளை சிறந்த முறையில் செய்து கொள்ள எம்மை நாடுங்கள்.

**தயா அச்சகம்**
138, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(53245)

**பொருளியற் கல்லூரி**
நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

**A/L 97**
**Day Class**
இன்று ஆரம்பம்
10-00 மணி.
பொருளியல்
S. வரதராஜன்
(53250)

நெல்லியடி
**மஹாத்மா**
**வெண் திரையில்**
இன்று முதல்
பிரபு - சுபலக்சுமி
நடித்த
★ பொன் மனம்
காட்சிகள்:- 10-30, 2-30
(ப.நே.) (வி/2765)

**லிபேட்டி சினிமா**
அச்சுவேலி.
30 அடி அகலத் திரையில்
இன்றும்
நாளையும்
M.G.R., ஜெயலலிதா
நடித்த
**அடிமைப்பெண்**
பழைய நேரம்
10-30, 2-30
(53059)

உ
இன்று
மணவாளக்கோல விழாவும்
வருடாந்த அலங்கார உற்சவபூர்த்திவிழாவும்
காணும்
நீர்வேலி கருணைமிகு
**ஸ்ரீ காமாட்சியம்பாளின்**
பேரருளை வேண்டி வணங்குபவர்கள்
சுன்னாகத்தில் தரமான
★ நீர்வேலிப் பூட்டு ★ கத்தி ★ சத்தகம்
★ கட்டடப் பொருள்கள் ★ பெயின்ற் வகைகள்
விற்பனை செய்யும்
**ஸ்ரீ அம்பாள் றேட்ஸ்**
(யூனியனுக்கு அருகில்)
80, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.
தலைமையகம்:
**அம்பாள் ஹாட்வெயார்ஸ்**
உரிமையாளர்: த. பராசராஜசிங்கம்
காமாட்சியம்பாள் கோயிலடி, நீர்வேலி.
[53210]

உ
**நாவலர் கலாஷேத்திரம்**
நாவலர் வீதி, ஆனைப்பந்திச் சந்தி,
யாழ்ப்பாணம்.
கீழைத்தேய, மேலைத்தேய இசை
வகுப்புகள் ஆரம்பம்:
(தைப்பூசம் அன்று)
**10 - 02 - 98**
செவ்வாய் காலை 10-00 மணி
★ வாய்ப்பாட்டு ★ நடனம் ★ வயலின்
★ ஓர்கன் ★ மிருதங்கம்
★ கிற்றார் ★ மலோடிக்கா ★ வீணை
★ றம்ஸ் ★ சித்திரம்
★ புல்லாங்குழல்
(53251)


## முதலாம் வருட ஆத்ம சாந்தி அஞ்சலி

ஆலயத்தில் பல வருடங்களாக தலைவராக இருந்த
**அமரர் மு. ஐயாத்துரை**
(பிரபல வர்த்தகர் சண்டிலிப்பாய்)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

செயலாளராகப் பணி புரிந்த
**அமரர் சோ. அமிர்தலிங்கம்**
(முன்னாள் ஆசிரியர், மானிப்பாய் மகளிர் கல்லூரி)

அமரர்கள் நற்பேறு அடைய அம்பாளின் பாதாரவிந்தங்களில் பணிந்து வேண்டுகின்றோம்.

தர்மகர்த்தா சபை,
அருள் மிகு
ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
சீரணி, சண்டிலிப்பாய்.

(53224)


**க. பொ. த. (சாதாரணம்)**
**மாதிரிப் பரீட்சை**

இடம்:- மது கல்வி நிறுவனம்
டச்சு றோட், கோப்பாய் தெற்கு.
காலம்: 10-02-1998

காலை 7-30 — 8 30 — கணிதம் I
8-45 — 11 45 — கணிதம் II
1-00 — 2-00 — விஞ்ஞானம் I
2-15 — 5-15 — விஞ்ஞானம் II

1) இப்பரீட்சை வினாத்தாள்கள் எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழாத்தினால் தயாரிக்கப் படுகிறது.
2) இப்பரீட்சையில்தோற்றும் மாணவர்களுக்குவிசேட மாதிரி புள்ளித் திட்டத்துடன் கருத்தரங்குகள் 14,15-02-98 மாலை 3-00 மணிக்குநடை பெறும்.
3) இப் பரீட்சைகள் ஒவ்வொரு பூரணை தினத்திலும் நிறுவனத்தில் நடை பெறும்.
4) வெளி மாணவர்களும் இப்பரீட்சையில் கலந்து கொள்ளலாம்.

இயக்குநர்
மது கல்வி நிறுவனம்
(53235)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேசியாவில் கலவரங்கள் பரவுகின்றன

# கடும் நடவடிக்கை எடுக்க இராணுவம் உஷார்

## ஜகார்த்தாவில் படை அணிவகுப்பு! மக்களுக்கு எச்சரிக்கை!!

ஜகார்த்தா, பெப். 9

கடும் பொருளாதார நெருக்கடியால் தாக்கப்பட்டிருக்கும் இந்தோனேசியாவில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்து வருவதற்கு எதிராக நாட்டின் பல பாகங்களிலும் கலவரங்கள் வெடித்துள்ளன.

கடந்த மூன்று வாரங்களாக இடம்பெற்றுவரும் கலவரங்களின் கடைசியாக கிழக்கு இந்தோனேசியாவின் சும்பாவா தீவில் பெரும் மக்கள் கும்பல் ஒன்று சிறுபான்மையின சீனர்களுக்குச் சொந்தமான கடைகளைத் தாக்கிச் சேதப்படுத்தியது; தீ வைத்தது.

குழப்பங்கள் அதிகரித்தால் அதை சமாளிக்க இராணுவம் தயாராக உள்ளது என்பதைக் காட்டுவதற்காக 10 ஆயிரம் துருப்புக்கள் தலைநகர் ஜகார்த்தாவில் அணிவகுப்பொன்றை நடத்தின. இராணுவத் தளபதி அங்கு உரையாற்றினார்.

கடுமையான, அடக்குமுறையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியம் நேரிடக் கூடும் என்றும் எனினும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட நிலையிலேயே படையினர் அவற்றில் ஈடுபட வேண்டும் என்றும் இராணுவத் தளபதி வலியுறுத்தினார்.

மேலும் ஓர் அமைதியற்ற நிலைக்குத் தயாராக இருக்குமாறு நாட்டுமக்களை அவர் எச்சரித்தார்.

நாட்டின் பலபகுதிகளிலும் சிறுபான்மையின சீனர்களுக்கு எதிராக கலகங்கள் இடம்பெறுவதால் அவர்கள் பீதியடைந்துள்ளனர். அமைதி ஏற்படாவிட்டால் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டுப் போவதாக சீனர்கள் தெரிவித்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடியின் முழு அளவிலான தாக்கமும் இப்போது இந்தோனேசியர்களால் உணரப்படுகிறது. (ஐ)

## ஹொங்கொங்கில் கோழிகளுக்கு வரவேற்பு

ஹொங்கொங், பெப். 9

ஹொங்கொங்கை பெரும் பரபரப்பில் ஆழ்த்திய 'பறவைக் காய்ச்சல்' நெருக்கடியின் பின்னர் நேற்று முன்தினம் முதல் மீண்டும் அங்கு உயிர்க் கோழிகள் இறக்குமதி ஆரம்பமாகியுள்ளது.

முதற் கட்டமாக 3 ஆயிரத்து 300 கோழிகள் சீனாவில் இருந்து வந்தடைந்த போது அவற்றை வரவேற்க அதிகாரிகளும் நூற்றுக்கணக்கான செய்தியாளர்களும் கூடியிருந்தனர்.

வைரஸ் காய்ச்சல் பரவும் அபாயத்தை தடுக்க ஹொங்கொங்கில் கோழி இறக்குமதி தடை செய்யப்பட்டதும், நாட்டில் இருந்த சுமார் 13 லட்சம் கோழிகள் கொன்றொழிக்கப்பட்டதும் தெரிந்தவையே [ஐ]

## இன்ரர் நெற் மூலம் விநாயகர் வழிபாடு

மும்பாய், பெப். 9

இந்தியாவின் மஹாராஷ்டிரா மாநிலத்தின் தலைநகரான மும்பாயில் உள்ள சித்தி விநாயகர் ஆலயம் தொடர்பான தகவல்கள் 'இன்ரர் நெற்றில்' இணைக்கப்பட்டுள்ளன.

இனிமேல் உலகின் எந்தப் பகுதியில் உள்ள பக்தரும் கணனி முன் அமர்ந்து இருந்தவாறே சித்தி விநாயகரைத் தரிசிக்க முடியும். இன்ரர் நெற்றில் சித்தி விநாயகரின் முகவரி வெளியிடப்பட்டுள்ளது. அந்த இணைப்பில் தொடர்பு கொண்டால் முதலில் விநாயகரின் படம் திரையில் தோன்றும். தொடர்ந்து ''வக்ர துண்ட மகாகாய'' என்ற சுலோகம் ஒலிக்கும்.

பக்தர்கள் காணிக்கைகளை அனுப்பவும் இதனைப் பயன்படுத்த முடியும். [ஐ]

# 370 விமானங்கள் தயார் நிலையில்!

## எந்நேரமும் தாக்குதல்?

வளைகுடா, பெப். 9

ஈராக் மீதான தாக்குதலுக்கு ஆயத்தமாகும் வகையில் வளைகுடாவில் உள்ள தனது படைகளை அமெரிக்கா முடுக்கி விட்டுள்ளது. 19 போர் விமானங்களும், 23 உதவி விமானங்களும் வளைகுடாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவற்றுடன் சேர்ந்து மொத்தம் 370 போர் விமானங்கள் வளைகுடாவில் தயார் நிலையில் உள்ளன.

அதிபர் சதாம் ஹுசேய்ன் இனியும் காலதாமதமின்றி பணிந்து வராவிட்டால் இராணுவத் தாக்குதல் எந்த வேளையிலும் நடைபெறலாம் என்று வாஷிங்டனில் இருந்து தாயகம் திரும்பியுள்ள பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளெயர் எச்சரித்துள்ளார். பிரிட்டனும் தனது படைகளை வளைகுடாவுக்கு அனுப்பியுள்ளது.

இராணுவ நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் ரஷ்யா நெருக்கடிக்குத் தீர்வு காண பக்தாத்தில் தீவிர ராஜீக முயற்சிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளது. பதற்றம் அதிகரித்து வருவதை அடுத்து ஈராக் நெருக்கடிக்கான அமைதித் திட்டம் ஒன்றை அரபு லீக் வகுத்துள்ளது. இத்திட்டம் விரைவிலேயே ஐ. நா. பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்கப்படும் என அரபு லீக் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

## குவைத் மக்கள் சகலருக்கும் முகமூடி

குவைத், பெப். 9

ஈராக் நடத்தக் கூடிய நச்சு வாயுத் தாக்குதலில் இருந்து பாதுகாக்கக் கூடிய முகமூடிகள் அடுத்த இரு தினங்களில் நாட்டு மக்கள் அனைவருக்கும் வழங்கப்படும் என்று குவைத் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஈராக் நெருக்கடி தொடர்பான அவசர அமைச்சரவைக் கூட்டத்தின் இடையே செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

எகிப்தில் இருந்து 50 ஆயிரம் முகக் கவசங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாக 'குவைத்' நாளிதழ் ஒன்று தெரிவித்தது.

ஈராக்கின் தாக்குதலை எதிர் கொள்ள குவைத் படைகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# அரிசி ஆலையில் குண்டு வெடிப்பு! முஸ்லிம் தீவிரவாதிகள் நால்வர் பலி!!

## தஞ்சையில் நேற்று அதிகாலை சம்பவம்

சென்னை, பெப். 9

தஞ்சாவூர் மாவட்டம் சாலியமங்கலத்தில் நேற்று விடிகாலை அரிசி அரைக்கும் ஆலை ஒன்றில் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்தன. அங்கிருந்த நால்வர் பலியாகினர்; மூவர் காயமடைந்தனர்.

நான்கு குண்டுகள் வெடித்தன. அரிசி ஆலையின் பெரும் பகுதி இடிந்து வீழ்ந்தது. இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களும், காயமடைந்தவர்களும் தமிழ் நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும்—

அவர்கள் வெடிகுண்டுகளைத் தயாரித்துக் கொண்டிருந்த சமயம் இந்த விபத்து நேர்ந்துள்ளதாகவும் மூற்கொண்டுகிடைத்த பி. ரீ. ஐ. செய்தி தெரிவித்தது.

அரிசி ஆலையில் இருந்து 10 மூடைகளில் ஆயுதங்களும், வெடி பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன. 34 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலைப் புறக்கணிக்குமாறு தமிழ் நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் அழைப்பு விடுத்திருந்தது. தேர்தலைக் குழப்பவே இந்த வெடிகுண்டுகள் தயாரிக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இந்த அரிசி ஆலையின் உரிமையாளர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். விசேட பொலீஸ் குழு ஒன்று விசாரணைகளை நடத்தி வருகிறது. (ஐ)

# விளைச்சல் தோல்வி கண்டதால் 68 விவசாயிகள் தற்கொலை!

## கர்நாடகா, ஆந்திராவில் பரிதாப மரணங்கள்

தென்னிந்தியாவின் கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் விளைச்சல் பொய்த்துப் போவதால் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

கர்நாடகாவில் கடைசியாக மூன்று விவசாயிகளும், ஆந்திராவில் பருத்தி விளைச்சல் பாதிக்கப்பட்டதால் சுமார் 65 விவசாயிகளும் இதுவரை தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது.

ஆந்திராவில் முதலில் வரட்சியாலும், பின்னர் எதிர்பாராத விதமாகப் பெய்த மழையினாலும் மற்றும் பூச்சி, பீடை கொல்லிகள் பலனளிக்காததாலும் பருத்திச் செய்கை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. விளைச்சல் பொய்த்துப் போனதால் இரசாயனப் பீடை கொல்லிகளைப் பெறுவதற்காக வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாததாலேயே இளம் விவசாயிகள் பலர் அதே இரசாயனப் பூச்சி கொல்லிகளை அருந்தி உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர். (ஐ)

# மீண்டும் பூகம்பம் தாக்கியது

காபூல், பெப். 9

ஆப்கானிஸ்தானின் வட பகுதியில் 4 ஆயிரம் பேர் பூகம்பத்துக்குப் பலியாகியுள்ள நிலையில் அந்நாட்டின் வடகிழக்கு தொலைதூரப் பகுதியை நேற்று முன்தினம் மற்றொரு நிலநடுக்கம் உலுக்கியது. இதனால் நூற்றுக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். பிரதான வீதிகள் பல பிளவுண்டதால் போக்குவரத்துக்கு மேலும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை — புதனன்று நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. (ஐ-8)

★ மலிவு விலையில் ★
அனைவரும் விரும்பிப் பயன்படுத்தும்
லீலா கலண்டர்கள், டயறிகள்
★ மொத்தமாகப் பெற்றுக் கொள்வோருக்கும் வியாபாரிகளுக்கும் விசேட கழிவுகள்
கிடைக்குமிடங்கள்:
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
மொடேர்ண் ஸ்ரோர்ஸ்
பஸ் நிலையம்,
நெல்லியடி.
கரன் புக்சென்டர்
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மீனவர் பிரச்சினையை தீர்க்க தளபதி பலகல்ல வாக்குறுதி

## கூட்டணிப் பிரமுகர்கள் சந்தித்துப் பேச்சு

யாழ்ப்பாணம், பெப் 9

யாழ் கரையோரப் பகுதி மீனவர்கள் அதிகாலை 4 மணிக்கு மீன்பிடிக்கச் செல்வதற்கு அனுமதிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக வட பிராந்திய இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களான மாவை சேனாதி ராஜா, சட்டத்தரணி பொன்.சிவபாலன் ஆகியோருக்கு உறுதியளித்துள்ளார்.

மாவை சேனாதி ராஜாவும், சட்டத்தரணி பொன். சிவபாலனும் நேற்று முன்தினம் தளபதி பலகல்லவை பலாலியில் சந்தித்து யாழ் மீனவரின் பிரச்சினைகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இச் சந்திப்பின்போது பாதுகாப்பு பிரதேசங்களாக இருக்கும் பகுதிகளில் மக்கள் மீளக்குடியேற முடியாதுள்ளது என்றும், எனவே அவர்கள் குடியேற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கூட்டணிப் பிரமுகர்கள் கோரிக்கை விடுத்தனர்.

காங்கேசன்துறை உட்பட மக்கள் இதுவரையும் மீளக்குடியேறாத பகுதிகளில் மீளக் குடியமர விரைவில் ஒழுங்குகள் செய்து தரப்படும் என்றும் மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல உறுதியளித்தார். (ஐ-5)

---

# மஹா கும்பாபிஷேகமும் ஒலிப்பதிவுநாடா வெளியீட்டுவிழாவும்

கோண்டாவில் வடக்கு அருள் மிகு

## சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான

புனராவர்த்தன பிரதிஷ்டா பஞ்ச குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம்

09—02—1998 இன்று திங்கட்கிழமை காலை 6 மணிக்கு யாக பூசைகள் ஆரம்பமாகி காலை 10.16 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

இயலிசை வாரிதி, கலாரத்னா, கலா பூஷணம், பிரம்ம ஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர் இயற்றி பாரதநாட்டு கலை மாமணி கலாரத்னா டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் சிவசிதம்பரம் இசையமைத்து ஸ்ரீ ஞானவைரவர் பெருமான் பெயரில் பாடிய ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா

இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும்.

விழாவில் கலந்து எம்பெருமானின் நல்லருளைப் பெறுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

ஆலய பரிபாலனசபை விழாக்குழு.

விழா சிறப்புற வாழ்த்துபவர்:-

**வேணி ஸ்ரோர்ஸ்,**

மொத்த, சில்லறை வியாபார ஸ்தாபனம்,

165. கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(53204)

---

# பாராட்டுகின்றோம்

யா/அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலையின் முதன் முதலாக ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 118 புள்ளி பெற்று சாதனை படைத்த

செல்வி தி. ரேவதியை

பாராட்டுவதில் பெருமை அடைகின்றோம்.

அரியாலை கிழக்கு முனங்கு மக்கள்

(53203)

---

# தேன் இசை மழை

மணிக்குரல் விளம்பர சேவையின்

25 ஆவது ஆண்டு விழாவை

முன்னிட்டு

இல. 20, ஜுபிலி பஜார், யாழ்ப்பாணம்

'மக்ஷல் ஹவுஸ்' ஆதரவில்

## தேன் இசை மழை

இந்த நிகழ்ச்சியில் பங்கு பற்ற விரும்பும் நேயர்கள் ஆண், பெண் இருபாலாரும் நீங்கள் பாட விரும்பும் பாடல், உங்கள் பெயர், முகவரி என்பனவற்றைத் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

வி. எஸ். சற்குணன்

மணி வீடியோ

இல. 46, 3 ஆம் குறுக்குத்தெரு,

யாழ்ப்பாணம்.

[53190]

---

# கண்ணீர் அஞ்சலி

மக்கள் நலன்காக்கும் பிரிவின் முன்னாள் தலைவர்

**வேலாயுதபிள்ளை**

அவர்களின் தந்தையார்

## ஆறுமுகம் கைலாயபிள்ளை

அவர்களது மறைவையிட்டு, அவரது குடும்பத்தினருக்கு எமது சங்க சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள் நலன்காக்கும் பிரிவு

தலைமையலுவலகம்,

இருபாலைச்சந்தி, கோப்பாய்.

(53244)

---

## பாடசாலையைத் திருத்த நிதி

உரும்பராய், பெப். 9

உரும்பராய் இந்துக்கல்லூரியின் சேதமடைந்த பகுதி இவ்வாண்டு திருத்தியமைக்கப்படவுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் தமது பகுதிக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து கோப்பாய் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் இக்கல்லூரியின் புனரமைப்பிற்கு 2 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை, ஊரெழு றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆகியவற்றுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ 154)

## ஓய்வு நாள் பாடசாலை

நவாலி, பெப் 9

நவாலி திருச்சபையின் ஓய்வு நாள் பாடசாலை பிரதி ஞாயிறு ஆராதனையைத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

(ஐ-100)

## ஆலயப் புனரமைப்பு

வேலணை கிழக்கு பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோயில் பரிபாலனசபை புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

தபால் அதிபர் க. சரவணநாதன் தலைமையில் அமைக்கப்பட்ட மேற்படி பரிபாலன சபை ஆலயப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதுடன் வருடாந்த உற்சவம் நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்வதென முடிவு செய்துள்ளது.

(ஐ-111)

## நல்லை ஆதீனத்தில் சமய தீட்சை

கொழும்புத்துறை, பெப் 9

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்குபூரணை நன்னாளில் ஆதீன முதல்வர் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் மாணவர்களுக்கு "சமய தீட்சை" வழங்கப்படும்.

தீட்சை பெறவிரும்புவோர் ஆதீன முதல்வருடன் முன்கூட்டியே தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு தொடர்ந்து ஒவ்வொரு பூரணை தினத்தன்றும் ஆதீனத்தில் இடம் பெறும். (ஐ-30)

---

## ஆஸ்பத்திரியை திறக்கக் கோரிக்கை

செம்பியன்பற்று, பெப். 9

வடமராட்சி கிழக்கு ஈழுனையில் இயங்கி வந்த சித்த ஆயுள்வேத வைத்தியசாலையை மீண்டும் இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சமூக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடம் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ 36)

---

# மாதாந்த அறிவியற் கருத்தரங்கு

## தொடர் 14

"தமிழிலக்கிய வரலாற்றுச் செல் நெறிகளினூடே சங்க இலக்கியங்களின் தனித்துவமான பண்பு"

**திரு. பொ. அருந்தவநாதன்**

B. A சிறப்பு

10—02—1998 செவ்வாய் காலை 9.00 மணி

**இணுவில் மத்திய கல்லூரி மண்டபம்**

A/L மாணவருக்கும் உதவும்

தெஸ்பியன் கலை வட்டம்

இணுவில்.

[53241]

---

# கண்ணீர் அஞ்சலி

அலுக்கை அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட விஷகடி வைத்திய நிபுணரும், எமது ஸ்தாபனத்தின் நீண்ட கால பணியாளருமாகிய

## லோப்பையா மரியநாயகம்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

திருமகள் அழுத்தகம்,

சுன்னாகம்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,

நெல்லிப்பழை.

[53239]

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

# புதிய மாணவர்கள் பதிவு செய்தல் கல்வி ஆண்டு 1997 / 1998

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு கற்கை நெறிகளுக்கு, 1997/98 கல்வியாண்டிற்கு அனுமதிக்கப்பட்டோர் தங்கள் பதிவை கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

1. கலை -02-03-1998, 03-03 1998
2. வர்த்தகம் / முகாமைத்துவம்- 04-03-1998
3. பௌதிக விஞ்ஞானம்/ பிரயோக விஞ்ஞானம்- 26-02-1998
4. உயிரியல் விஞ்ஞானம்/ மருத்துவம் விவசாயம்- 27-02-1998

பதிவின்போது பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்:-

அ. பூரணப்படுத்தப்பட்ட பதிவு விண்ணப்பப் படிவம்

ஆ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அனுப்பப்பட்ட அனுமதிக்கடிதம்

இ. பிறப்புச்சான்றிதழ் (மூலப்பிரதியும், போட்டோபிரதியும்- பிறப்புப் பதிவுக் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)

ஈ. பாடசாலை விடுகைப் பத்திரம் (மூலப்பிரதியும் போட்டோப்பிரதியும்)

உ. நிழற்படப்பிரதி - 8 (கறுப்பு, வெள்ளை அளவு "2 x 2½")

ஊ. தேசிய அடையாள அட்டையின் போட்டோப்பிரதி

எ. க. பொ. த. (உயர் தரம்) பெறுபேறு (மூலப் பிரதியும் போட்டோப் பிரதியும்)

ஏ. கட்டணம்

விஞ்ஞானபீடம் — ரூபா 305/-

மருத்துவபீடம் — ரூபா 850/-

விவசாயபீடம் — ரூபா 275/-

கலைப்பீடம் — ரூபா 175/-

(புவியியலை ஒரு பாடமாக கற்க விரும்பும் மாணவர்கள் ஆய்வு கூடக் கட்டணமாக ரூபா 100 மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும்)

மேற் குறித்த திகதிகளில் பதிவை மேற்கொள்ளத் தவறியவர்கள் 25-03-98 வரை தேர்வுகளும் அனுமதிகளும் கிளையில் தங்களது பதிவை மேற்கொள்ளலாம். 25-03-98 இற்கு முன்னர் பதிவு செய்யத் தவறியவர்களின் பெயர்களை வெற்றிடங்களை நிரப்புவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படும். தபால் மூலம் பதிவு செய்யவிரும்புவோர் ரூபா 2-50 முத்திரை ஒட்டப்பட்டு சுய விலாசமிடப்பட்ட கடித உறையை தேர்வுகளும் அனுமதிகளும் கிளை உதவிப் பதிவாளருக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். அப்படிவத்தை சமாதான நீதிவான் மூலம் உறுதிப்படுத்தி உரிய கட்டணத்தை பதிவாளர்/நிதியாளருக்கு காசுக்கட்டளையுடன் 25-03-98ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிரத்தியேக காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

- பதிவாளர்

(இ-2827)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேம்படி மகளிர் கல்லூரி

09—02—98 இல் நடைபெற இருந்த ஆண்டு 6 மாணவர்களின் பெற்றோர் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

- அதிபர்

(சி/2844)

---

குருமயம்
கைதடி

## ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரம
## தியான நிலைய பிரவேச வைபவமும்
## 'தியானம்' சிறப்பு மலர் வெளியீடும்
## குருபூஜா வழிபாடும்

**காலம்: 09-02-1998** திங்கட்கிழமை
காலை 6.30 தொடக்கம் 7.30 வரை
தியான நிலைய பிரவேச சாந்தி வைபவம்.

பங்குபற்றும் சிவாச்சாரியர்கள்:
சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் (ச. நீ.)
சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள்
சிவஸ்ரீ மு. கணேசக்குருக்கள்
சிவஸ்ரீ யோ. குருசாமிக் குருக்கள்
சிவஸ்ரீ சி. மனோகரக் குருக்கள்

★ மு. ப. 9.00 - குருபீட பாத பூஜா - திரு. சி. இரத்தினசிங்கம்
★ மு. ப. 9.30 - 'தியானம்' மலர் வெளியீடு

வரவேற்புரை: திரு. சு. செல்வராசா (பொதுச் செயலாளர்)
தலைமையுரை: குலபதி ஆறுமுகம் கந்தையா (ச. நீ.)
முன்னிலை: சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையார்
ஸ்ரீமத் ஆறுமுகம் சுவாமிகள்
துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (ச. நீ.)
அருளுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்.
பிரதம விருந்தினர் உரை: திரு. பு. சுந்தரம்பிள்ளை (பிரதேச செயலர்)
கௌரவ விருந்தினர் உரை: டாக்டர் வ. சின்னப்பு (ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகள்-சிஷ்யன்)
மலர் ஆய்வுரை: திரு. ஆறு. திருமுருகன் (ஆசிரியர் இந்துவரோதயக் கல்லூரி)
முதற்பிரதி பெறுபவர்: திரு. கு. கங்கைவேணியன் (வேணிகளஞ்சியம்)
சிறப்புரையாளர்கள்: திரு. சி. சக்திகிரீவன் (செயலாளர் இந்து சமயப்-பேரவை)
டாக்டர் கே. ரி. எஸ். சபாநாதன்
பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (நாவற்குழி)
நன்றியுரை: திரு. அ. யோகநாதன் (இணைச்செயலாளர்)

★ பாலர் பாடசாலை மாணவர்களுக்கான பரிசில் வழங்கல்.
★ ஆசிரம தொண்டர்களைக் கௌரவித்தல்

மங்கள இசை: திரு சத்தியநாதன் குழு
திரு. தங்கவேலு குழு
சிற்பவேலை: திரு. இ. தங்கேஸ்வரன் குழுவினர் (அராலி)

பகல் 12.00 மணிக்கு விசேட பூசையைத் தொடர்ந்து மகேஸ்வரபூசை நடைபெறும். அன்பர்கள். அடியார்கள் பங்கு கொண்டு வழிபாடாற்றி. தியானம் இருந்து குருவருள் பெற்று இறை சிந்தனையுடன் திகழ அன்புடன் அழைக்கின்றோம்.

விளம்பர அன்பளிப்பு:
செல்வி நிர்மலகுமாரி சரவணமுத்து
கைதடி வடக்கு, கைதடி.

[53116]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### கார்த்திகேசு ஆறுமுகம்

மலர்வு: 07-12-1926
உதிர்வு: 11-01-1998

சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு ஆறுமுகம் 11-01-98 அன்று சிவபதம் அடைந்ததை அறிந்து அவரது மரணச்சடங்கில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தபால்மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பிவைத்தவர்களுக்கும், இன்னும் சகலவிதமான முறைகளில் உதவி நல்கியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் 10-02-98 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

ஐ. சிவானந்தராசா
(மருமகன்)

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

(531[illegible])

---

## ஆயுதங்களைக் கைப்பற்றியதாக புலிகள் அறிவிப்பு

வவுனியா, பெப். 9

கடந்த வெள்ளியன்று பரந்தன்கரடிப்போக்குச் சந்தியில் இருந்து கிளிநொச்சி நோக்கி முன்னேற முயன்ற படையினருடன் தாம் மேற்கொண்ட எதிர்த்தாக்குதலில் பெருமளவு ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றியதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

கைப்பற்றிய ஆயுதத் தளபாடங்களின் விவரம் வருமாறு:

★ ஆர். பி. ஜி -02
★ 40. மி. மீ. பிஸ்ரல் -03
★ ரி. 56 இரண்டு ரகத் துப்பாக்கிகள் -03
★ ரி. 56 ஒன்று ரகத் துப்பாக்கிகள் -02
★ ரி. 81 ரகத் துப்பாக்கி-01
★ ரி. 56 சப் மெசின் துப்பாக்கி -01
★ ரி. கே. மேலதிக ரவைகள் -02
★ ஆர்.பி.ஜி. எறிகணைகள் -02
★ ரி. கே. இணைப்புக்களுடன் கூடியரவைகள் -1475
★ ரி. கே. இணைப்புக்கள் -1350
★ நடுத்தர இணைப்பு ரவை -765
★ நடுத்தர ரவைகள் -2960
★ ரி. கே. ரவைக் கூடுகள்-26

இராணுவ வீரர் ஒருவரின் சடலத்தையும் தாம் கைப்பற்றியதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(இ-7-9)

## மாதாந்தக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெ.9

நல்லூர் பிரதேச சபை நடத்தும் மாதாந்தக் கருத்தரங்கு கொக்குவில் உப அலுவலகக் கேட்போர் கூடத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

'இளைஞர்கள் எதிர்நோக்கும் சமூகப் பிரச்சினைகள்' என்ற விடயம் பற்றி யாழ். பல்கலைக்கழக சமூகவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஜீ. எம். செபஸ்தியாம்பிள்ளையும், கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம். சின்னத்தம்பியும் விரிவுரையாற்றுவர். (ஐ)

---


சித்த மருத்துவ மூலிகைகளுடன் சீயாக்காய் சேர்த்துத் தயாரிக்கப்பெற்றது
ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்டு வாங்கிப் பயன் பெறவும்
ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர்
தயாரிப்பாளர்கள்
ஸ்ரீ சச்சிதானந்தா என்ரபிறைசஸ்,
கைதடி. (52935)



விற்பனையும் திருத்தமும்
குளிர்சாதனப் பெட்டி
DEEP FREZER
இங்கிலிஸ் மேக் - புதுமோட்டருடன்
விலை ரூபா 35 000/-
தட்டச்சு இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள் திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு:
க. பொன்னுத்துரை
கோயில் குடியிருப்பு
சாவகச்சேரி.
(சி/2786)


---

## தொடர்பு கொள்ளவும்

அருள் மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் இராஜகோபுர வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் செங்கட்டிகள் அன்பளிப்பாக அல்லது விற்பனைக்கு வழங்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்:

அருள் மிகு ஸ்ரீ நாக பூஷணி அம்பாள் தேவஸ்தானம்

சீரணி - சண்டிலிப்பாய்.

(53225)

---

உ
சர்வம் சிவமயம்

## வாழ்த்துகிறோம்

கொழும்புத்துறை பிரபல சமய - சமூக சேவையாளரும், எமது வித்தியாலய முன்னாள் அதிபருமான

''சமூக ஜோதி''

உயர் சைவத்திரு, கா. கணேசதாசன்

### சமாதான நீதிபதியாக

6 ஆம் திகதி பதவி ஏற்றுள்ளமையை மனமார வாழ்த்தி அவர் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

''வாழ்க வளமுடன்''

பழைய மாணவர்கள்
யாழ். கொழும்புத்துறை
துரையப்பா வித்தியாலயம்

(53216)

---


## ரீகல் வீடியோ

W· 131 W பனசொனிக் வீடியோ டெக்கும்,
S.R. 30 வீடியோ டெக்கும்,
Fm. 2 ஸ்ரில் கமராவும்
விற்பனைக்கு உண்டு.

பழைய புதிய திரைப்படங்கள் C D யில் இருந்து பதிவு செய்து கொடுக்கப்படும்.

ரீகல் வீடியோ,
42/7 ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(53232)


---

## அறிவித்தல்

### வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்தி சேவைச் சங்கம்
### பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் 14-02-98 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல. 30, நவீனசந்தை, மேல்மாடி, யாழ்ப்பாணம் என்ற இடத்தில் நடைபெறவிருப்பதால் உரிமையாளர்கள், சாரதிகள் அனைவரும் தவறாது சமுகந் தரும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

மா. சிவசுப்பிரமணியம்

இல. 30, நவீனசந்தை, மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

(53230)

---

## 31 ஆம் நாள் நினைவுப் பூக்கள்

தோற்றம்: 27 — 0 — 1926



மறைவு: 11 — 01 — 1998

### திருமதி செல்லப்பா பவளம்

இன்று 09—02—1998 திங்கட்கிழமை எமது இல்லத்தில் இடம் பெறும் அன்னாரின் ஆத்ம சாந்திக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தவர்.

''விஜயவாசா''
கைதடி மேற்கு,
கைதடி.

(53220)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

குளிர்சாதனப் பெட்டி 1 ஸ்ராண்ட்மின்விசிறி-2(கே.டி.கே.), நஷனல் மின்விசிறி-1 உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- N.R. தனரட்ணம் 8, 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

[53205]

ஆர்மோனியங்கள், ஓர்கன் (pss-290), கிற்றாரகள் (Box), புல்லாங்குழல்கள், மிருதங்கம் ஆகியவை விற்பனைக்குண்டு. தொடர்பு:- சுரவீணா, 23, குறோசர் வீதி, சுண்டுக்குளி.

[53227]

### புலமைப் பரிசில்

புலமைப்பரிசில் 98 Bright Scholar 1-வது பரீட்சை வினாத்தாள்கள் விடைகளுடன் விற்பனையாகின்றன. ஆசிரியர்:- ந ஆனந்தசம்பசன் Shamrock Academy, J/Chundikuli

(53209)

### நூல்கள்

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் உங்களது வரலாறு. ஒவ்வொரு வீட்டிலும் நூலகத்திலும் இருக்க வேண்டிய நூல். 275 நாடகங்களை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியது எங்கும் கிடைக்கும் 50/-

(52996)

### மணமகள் தேவை

இங்கிலாந்தில் குடியுரிமை பெற்று தனியார் நிறுவனத்தில் பொறியியலாளராகத் தொழில் புரியும் முப்பது வயதுள்ள யாழ். இந்து மணமகனுக்கு இருபத்தேழு வயதுக்குட்பட்ட படித்த மணமகளை பெற்றோர் விரும்புகின்றனர். உதயகுலம், கும்பம், பூரம் 3. செவ்வாய் 12 இல் மணமகன் இலங்கை வந்து திருமணம் செய்து கூட்டிச் செல்வார். C/o இல. 690, உதயன்.

[53180]

### திருத்த வேண்டுமா?

சகல ரீ.வி நிகழ்ச்சிகளையும் தெளிவாகப் பார்ப்பதற்கு அன்ரனா பொருத்திக் கொள்ளவும், ரீ.வி., றேடியோ, டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ளவும்: வீனஸ் தனபாலசிங்கம், Diploma In Electronic Engineering London 284, ஸ்ரான்லி வீதி [நாகவிகாரை முன்பாக] யாழ்ப்பாணம்.

[சி/2843]

---

# வீனஸ் - டில்கா
# வெள்ளி விழா

புதுமெருகுடன் நாளை 10-02-1998
செவ்வாய்க்கிழமை
12 மணிக்கும் — 1 மணிக்கும் இடையேயுள்ள சுப வேளையில் வெள்ளி விழாவை

யாழ். பிரதேச செயலர் திரு. பி. செந்தில்நாதன் ஆரம்பித்து வைப்பார்.

ரீ.வி, றேடியோ, மணிக்கூடு, மின்சார உபகரணங்கள் திருத்துவதிலும், தெளிவாக தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கும், அன்ரனா பொருத்துவதற்கும் பலவருட அனுபவம் மிக்கவர்கள்:

**வீனஸ் - டில்கா**
**284, ஸ்ரான்லி வீதி,**
(நாகவிகாரை முன்பாக)
**யாழ்ப்பாணம்.**

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் யாவரும் நேரில் வந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-2841)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் கந்தையா வடிவேலு (சாமி)**
(செம்பாட்டோலை, இமையாணன் கிழக்கு)

தாயின் மடியில்: **27 — 10 — 1935**
ஆண்டவன் அரவணைப்பில்: **11 — 01 — 1998**

"வாழ்விலும் என்னை நேசித்தாயே;
மரணத்திலும் என்னை மறவாதே!"

பாசமுடன் என்னைப் பல வருடங்கள் வளர்த்த ஐயாவே!
பாச மலரே நீ என்னைப் பிரிந்து சென்று விட்டாயே
நேசமுடன் நீ எனக்கு சொன்ன வார்த்தைகளை கேட்டு ஐயா!
நேசமாய் உன் வழியில் நடப்பேன் இது உறுதி ஐயா.

உன் பிரிவால் கண்ணீர் வடிக்கும்:
நீர் செல்லமாய் வளர்த்த மகன்
செ. சிவனடியான்

கலைமகள் வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

[53188]

---

# வாழ்த்துகின்றோம்

## யா/நல்லூர் ஆனந்த வித்தியாலயம்

1997 புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தி அடைந்த மாணவன்
செல்வன் ஜெ. சஞ்சீவ் — 115 புள்ளி
இம்மாணவனை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களை உளமாரப் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(53202)

---

# ஜெய வீரகத்தி விநாயகர்
# 108 சங்காபிஷேகம்

காலம்:- 10 — 02 — 1998
செவ்வாய்க்கிழமை முற்பகல் 9. 00 மணி
இடம்: யாழ். நீராவியடி ஜெயவீரகத்தி விநாயகர் கோயில்

108 சங்காபிஷேகம், அர்ச்சனை, மேளக்கச்சேரியுடன் விசேட பூசையும் நடைபெறும். அத்துடன் அன்னதானமும் வழங்கப்படும்.

சிவப்பிரம்மஸ்ரீ சு. ஸ்ரீதரக் குருக்கள்
(கோயில் பிரதம குரு)
கிரியைகளை நடத்தி வைப்பார்.

விழா உபயகாரர்

(53137)

---

# முதலாண்டு நினைவஞ்சலி



**இ. றஜனி (பேபி)**

மலர்வு: **13 — 08 — 1972**
உதிர்வு: **21 — 01 — 1997**
**திதி: 09 — 02 — 1998**

ஆண்டு ஒன்று சென்றதம்மா - உன்
அழகுவதனம்கண்டு
விடிவெள்ளிகள் வரவேற்க விரைந்தனையோ
சொர்க்கவாசல்
நித்தம் உம்மை அழைக்குதம்மா நின் வீட்டுவாசல்
ஊர்விட்டு சென்றேன் அம்மா உன் உயிர்
காக்கவென்று
ஊமையாய் வந்தேன் அம்மா உன் உயிர்
தொலைந்தபின்
எம் ஆசைகள் எல்லாம் அறுந்தே போனது அம்மா
உன் கருணைமுகம் காணாது கதறுகின்றோம்
அம்மா!

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் யாவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

உன் நினைவால் வாடும்:
**பெற்றோர், அண்ணன்மார்,**
**அண்ணிமார், மருமக்கள்**
**நிரஞ்சன், நிசாந்தினி.**

தகவல்:
வி. ரங்கநாதசாமி,
உடையாமணல்,
வல்வெட்டித்துறை.

(சி/2834)

---


உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஈசுர வருடம் தை மாதம் 27 ஆம் நாள் (09 - 02 - 98) திங்கட்கிழமை புனர்பூச நக்ஷத்திரமும் மீனலக்கினமும் கூடிய காலை 9-35 மணி முதல் 10 - 18 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**சிவநேசன்**
(ஆசிரியர், யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை)
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**வாசுகி**
(ஆசிரியை, யா/தாவடி இ. த. க. பாடசாலை)
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு இணுவில் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் திருமாங்கல்யதாரண வைபவம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் குடும்பசமேதராராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி இ நாகலிங்கம்
தாவடி மேற்கு,
கொக்குவில்.

திரு. திருமதி சொர்ணலிங்கம்
"தங்க அகம்"
இணுவில் மேற்கு,
இணுவில்.

(49941)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் - காங்கேசன் கப்பல் சேவை விரைவில்!

வவுனியா, பெப். 9

மன்னார் — காங்கேசன் துறைக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளதாக மன்னார் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

கடற்படையினரின் அனுமதி கிடைத்ததையடுத்து குட்வில் கம்பனி இச் சேவையை வழங்க முன்வந்துள்ளது. எனினும் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ள இரு கப்பல்களும் இலங்கைக் கொடியின் கீழ் பதிவு செய்யப்படாமையினாலேயே சேவையை உடனடியாக ஆரம்பிக்க முடியாது உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வடபகுதி மீள் குடியேற்ற புனர்வாழ்வு அதிகார சபை இக் கப்பல் சேவையை விரைவாக ஆரம்பிக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றதாக இன்று கொழும்பில் நடைபெற உள்ள முக்கிய மாநாட்டில் இதுதொடர்பாகமேலும் ஆராயப்பட உள்ளது.

குட்வில் கம்பனி பயணிகள் மற்றும் இடம்பெயர்ந்தோர் ஆகியோரிடம் இருந்து பயணத்திற்கான பணத்தை அறவிட்டே இச் சேவையை வழங்கும். ஆனால் வடபகுதி மீள் குடியேற்ற புனர்வாழ்வு அதிகார சபை இடம்பெயர்ந்த மக்களுக்கானபயணக்கொடுப்பனவை வழங்க உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-164-9)

## யாழ். நகரப்பகுதியில் நுளம்புஒழிப்புதிட்டம்

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ். நகரப்பகுதியில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் நுளம்பு ஒழிப்புத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வீடு வீடாகச் சென்று இது சம்பந்தமான ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளதுடன் மலத்தியோன் தெளிக்கும் பணியும் மேற்கொள்ளப்படும்.

நீர்த்தேக்கங்களிலுள்ள குடம்பிகளை ஒழிப்பதற்கான மருந்தும் தெளிக்கப்படவுள்ளது.

தலையேற்படின் மலேரியா நோய் பரம்பலைத் தடுக்க மருந்து வகைகளும் பிரயோகிக்கப்படும் என்று மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்தார்.

(ஐ-5)

## பாடசாலை இடம்மாற்றம்

தற்போது மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் இயங்கி வரும் மாதகல் சென். தோமஸ் றோமன் கத்தோலிக்க த.க. பாடசாலை விரைவில் மீண்டும் முன்பு இருந்த சொந்தக் கட்டடத்திற்கு இடம்மாற்றம் செய்யப்படவுள்ளது. இத் தகவலை சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி றே. இருதயநாதன் தெரிவித்தார்.

(ஐ-135)

## தெருவிளக்கு அன்பளிப்பு

சண்டிலிப்பாய், பெப். 9

நவாலி சோமசுந்தரப் புலவர் வீதியிலுள்ள புனித அந்தோனியார் திருச் சொரூபத்திற்கு அருகில் தெரு விளக்கு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. டாக்டர் எஸ். சுந்தரராஜன் இதனை அன்பளிப்பாகப் பொருத்தியுள்ளார்.

(ஐ-135)

## அகவொளி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 9

அகவொளி குடும்ப வளத்துணை நிலையம் நடத்தும் ''பெற்றோரும் நாளைய குழந்தைகளும்'' என்னும் பொருளிலான கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பாங்சால் வீதியிலுள்ள குடும்ப வளத்துணை நிலையத்தில் நடைபெறும். சேவைக்கால ஆசிரியர்/ ஆலோசகர் திருமதி யாமம்பிகை சுப்பிரமணியம், உளவியலாளர் அருட்திரு எஸ். ஜே. இராஜநாயகம் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

(ஐ-4)

சித்த வைத்திய கூ. சங்கம்

## மலேரியா தடுப்பு மருந்து கண்டு பிடிக்க முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 9

கொக்குவிலுள்ள சித்த வைத்திய கூட்டுறவுச்சங்கத்தினர் மலேரியா நோயைக் கட்டுப்படுத்தும் மருந்து ஒன்றைக் கண்டறியும் ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது 120—க்கும் மேற்பட்ட மருந்து வகைகள் இச் சங்கத்தினரால் தயாரிக்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் கீழ் இயங்கும் இலவச ஆயுள்வேத மருத்துவ நிலையங்களுக்கு இச் சங்கத்தினால் தயாரிக்கப்படும் மருந்து வகைகளே வழங்கப்பட்டு வருகின்றன.

ஆயுள்வேத வைத்தியர்களின் ஆலோசனைகளுக்கு அமைய இங்கு தயாரிக்கப்படும் மருந்து வகைகளின் தரத்தை உயர்த்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஐ-5)

# செய்திக் கொத்து

## நியமனம்

நெடுந்தீவு, பெப். 9

நெடுந்தீவு பிரதேச சபையின் விசேட ஆணையாளராக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன் வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-111)

## கருவாடு உற்பத்தி அதிகரிப்பு

நெடுந்தீவு, பெப். 9

நெடுந்தீவில் கருவாடு உற்பத்தி அதிகரித்துள்ளது. எனினும் விலை வீழ்ச்சி ஏற்படவில்லை. கட்டாப்பாரை, பாரை போன்ற வகைகள் கிலோ 150 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

(ஐ-111)

## ஸ்தாபகருக்கு அஞ்சலி

நெடுந்தீவு, பெப். 9

வேலணை கிழக்கு மகாவித்தியாலயஸ்தாபகர் நினைவு அஞ்சலிக்கூட்டம் கடந்த வாரம் வித்தியாலய அதிபர் ஏ. சிவராசா தலைமையில் நடைபெற்றது.

பழைய மாணவர்கள் உட்பட பொதுமக்கள் பலர் இந்த அஞ்சலிக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வித்தியாலய ஸ்தாபகர் கந்தர் காங்கேசர் அண்மையில்கனடாவில்காலமானார்.

(ஐ-111)

## ஆதீனத்தில் திருமந்திர வகுப்பு

கொழும்புத்துறை, பெப். 9

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மாதந்தோறும் போயா தினத்தில் நடைபெறும் 'திருமந்திர வகுப்பு' நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4-00 மணிக்கு ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறும்.

பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் எஸ். சிவமகாலிங்கம் திருமந்திர விரிவுரையை நிகழ்த்துவார்.

(ஐ-30)

## உள்ளூர் கிழங்கு விலை வீழ்ச்சி

உரும்பராய், பெப். 9

உள்ளூர் உருளைக்கிழங்கின் விலை வெகுவாகக் குறைந்துள்ளது. திருநெல்வேலி பொதுச்சந்தையில் கிலோ 85 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே அறுவடை செய்யப்பட்டுச் சந்தைக்குக் கொண்டு வரப்பட்டமையால் நன்கு முற்றாத காரணத்தினால் இவற்றின் தரம் குறைந்துள்ளதும் விலை வீழ்ச்சிக்கு காரணமாகும்.

(ஐ-154)

## களைகள் அதிகரிப்பு

பயிர்ச்செய்கை நிலங்களில் இப்போது களைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. பயிர்கள் நன்குவளர இவற்றை அழிக்க வேண்டியது அவசியமானதால் விவசாயிகளுக்கு மேலதிகமாக செலவுகள் ஏற்படுகின்றன.

இவற்றைக் கூலியாட்களை அமர்த்திப் பிடுங்கவேண்டி அல்லதுகிருமிநாசினிதெளிக்க வேண்டியுள்ளது.

மழைகாலத்தில் வெள்ளத்துடன் வந்து தேங்கிய விதைகள் மூலமே களைகள் பெருகியுள்ளதாக விவசாயிகள்கூறுகின்றனர்.

(ஐ-154)

## தீக் காயத்தால் மூதாட்டி மரணம்!

ஆடையில் தீப்பற்றி எரிந்து கடந்த மாதம் 14 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட வயோதிபப் பெண் நேற்று முன் தினம் அங்கு மரணமானார்.

உரும்பிராய் தெற்கில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் இராசையா சின்னம்மா (வயது 75) என்பவரே மரணமானவராவார்.

தைப்பொங்கல் தினத்தில் பொங்கிக் கொண்டிருந்த வேளையே அருகில் இருந்த குத்துவிளக்குச் சுடர் சேலையில் பற்றி எரிந்து இவர் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது

(ஐ-15-ரீ)

# கைதடி சச்சிதானந்த ஆச்சிரமத்தில் தியான நிலையப் பிரவேசம் இன்று

யாழ்ப்பாணத்திலுள்ள இணுவில் கிராமம் சிவாலயப் பொலிவாலும், சித்தர்கள், பக்தர்கள் செறிவாலும் உயர்ந்துள்ளது. இக்கிராமத்திலுள்ள சிவகாமி அம்மன் ஆலயப்பணிகளோடு தொடர்புபட்டு வாழ்ந்த சின்னத்தம்பி புலவர் என்பவர் அம்பிகை மீது அளவற்ற அன்பு பூண்டவர். இவர் கவி பாடுவதில் சமர்த்தர். பல வருட இல்லற வாழ்வின் பின்னும் பிள்ளைப் பாக்கியம் அற்றிருந்தார். இதனால் மனம் சலித்த புலவர் தனது உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து ஒருநாள் இரவு தனது குல தெய்வமான சிவகாமிஅம்மன் ஆலயத்திற்குச்சென்று அங்கே தன்வாழ்வை முடித்துக் கொள்ள மேற்கொண்ட முடிவை உறுதி செய்தார். அவ்வேளை தெய்வீக உருப்பெற்ற அம்பிகை கடாட்சம் பெற்ற கற்பகம் என்னும் பெண், கவலையுற்றிருந்த புலவர் முன்பாகத் தோன்றி 'உனக்கு ஏழுபிறப்பும்தீயவை தீண்டா பழி பிறங்கா பண்புடைப் புத்திர பாக்கியம் தந்தோம் உன் கவலை ஒழிக' என்று கூறினார்.

அம்பிகையின் திருவருளினால் புலவரின் மனைவி கருவுற்றார். அவர் 1924 ஆம் ஆண்டு, அம்பிகை தேஜசுடன் கூடிய ஆண் மகவைப் பெற்றெடுத்தார். இப்பிள்ளைக்கு பேராயிரமுடையவர் என்னும் திருநாமத்தைச் சூட்டினார்கள்.

### கருவிலே திரு

கருவிலே திருவுடைய இப்பிள்ளை உரிய பருவத்தில் தன்னோடொத்த இளைய நண்பருடன் சிவகாமி அம்மன் ஆலயக்கிரியைத் தொண்டில் ஈடுபடலாயினன்.

சின்னத்தம்பி புலவரினால் இணுவில் சிவகாமி அம்மன் ஆலய முன்றலில் அமைக்கப்பட்டிருந்த மடத்தில் சாதுக்களும், சன்னியாசிகளும் நாளாந்தம் கூடுவது வழக்கம், அக்காலத்தில்இச்சிவனடியார் கூட்டத்துடன் பேராயிரமுடையார் உளம் பிரியாது மகிழ்ந்து உறவாடி சிவானுபவ பேறு பெறும் பெருமை உடையவரானார்.

முத்துச் சுவாமி என்னும் நயினாதீவுச் சுவாமிகள் இம் மடத்திற்கு வந்து செல்லும் போது பேராயிரமுடையாரின் தெய்வீக குணாம்சங்களை அவதானித்து இவர் முழு ஞானியாக பிரகாசிப்பார் என ஞான சபதம் செய்தார்.

### ஆலயத்தில் துயில்

1934 ஆம் ஆண்டு தந்தையார் சின்னத்தம்பி புலவர் காலமானார். தாயாரின் அரவணைப்பில் வளர்ந்து வந்த பேராயிரவர் சிவகாமி அம்மன் மீது கொண்ட அருட்தாகத்தால் இந்த ஆலயத்திலே இரவு வேளைகளில் துயில் கொள்வார்.

இதனை அவரது தாயாரும் மாமனாரும் விரும்பவில்லை. இதனால் மனம் நொந்து கொண்ட பேராயிரவர் வேதாந்தமடத்தை அடைந்து அங்கு மகாதேவா சுவாமிகளைச் சந்தித்தார். சுவாமிகளுடன் சில காலம் தங்கியிருந்து தொண்டாற்றி வந்தார். பேராயிரவருடைய அருட்தாகத்தை உணர்ந்த மகாதேவா சுவாமிகள் அவருக்குத் தீட்சை வழங்கி சச்சிதானந்த சாஸ்திரங்களைஉபதேசித்தார்.

தொகுப்பு: 'சக்தி சுவாமிகள்'

சச்சிதானந்த சுவாமிகள் குழுவின் உபதேசப்படி கௌபீனம் தரித்து பிச்சா பாத்திரம் ஏந்தி தவவாழ்வு வாழ ஆரம்பித்தார். தாடி ஜடை, காவியுடை ஆடையும் தூய வெண்ணீறும் விளங்க இவர் தென்மராட்சிப் பகுதியில் பல காலம் வாழ்ந்து பல அடியார்களின் அன்பையும் பெற்றார்.

சச்சிதானந்த ஆச்சிரமம்

பளை, சாவகச்சேரி கச்சாய், மட்டுவில் என தென்மராட்சியின் பலபகுதிகளிலும் உலாவிய சச்சிதானந்த சுவாமிகளின் அடியவர்களில் கைதடி செல்லம்மா என்ற பெண்மணியும் ஒருவர். அவர் சச்சிதானந்த சுவாமிகளின் தாயாக மதிக்கப்பட்டு போற்றப்பட்டு வந்தார்.

மட்டுவிலைப் புகுந்த இடமாகக் கொண்டு வாழ்ந்த செல்லம்மா அம்மையார் 1958 ஆம் ஆண்டளவில் தன் பிறந்த ஊராகிய கைதடிக்கு மீண்டும் வந்து தவவாழ்வை மேற்கொள்வதற்குரிய குடிசை ஒன்றை அமைத்தார். இதுவே இன்று ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமமாகச் செயற்பட்டுவருகிறது.

கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் சுவாமிகளின் பூசை முதலிய கருமங்கள் கடந்த 30 வருடங்களாக குறைவின்றி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் வருட நிறைவில் வரும் புனர்பூசத்தினத்தன்று விமரிசையான அபிஷேகமு. குருபூசையும் நடைபெறும்

தைப்பூசத் தினத்தில் கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமத்தில் சுவாமிகளின் குருபூசை வருடாவருடம் மகேசுர பூசையுடன் நிகழ்த்தப்பட்டு வருகிறது.

தியான நிலைப்பிரவேசம்

இன்று திங்கட்கிழமை கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரம தியான நிலைப் பிரவேச வைபவமும் தியானம் சிறப்பு மலர் வெளியீடும், குருபூஜா வழிபாடும் நடைபெறவுள்ளன.

குலபதி ஆறுமுகம் கந்தையா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் டி. சுந்தரம்பிள்ளையும், கௌரவ விருந்தினராக டாக்டர் வ. சின்னப்புவும் கலந்து கொள்கின்றனர்.

செல்லம்மா அம்மையார், ஆறுமுகம் சுவாமிகள், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் அருளுரை வழங்குவார்.

பாலர் பாடசாலை மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும், ஆச்சிரம தொண்டர்களைக் கௌரவித்தலும் விழா இறுதியில் நடைபெறும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீட்டு விழா

திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம்
திருமதி இராஜினிதேவி சிவலிங்கம்
அவர்களின் ஆக்கமான
அச்சுவேலி - நாவலம்பதி
**காட்டுமலைக் கந்தசுவாமி**
பேரில்
**புதிய பிள்ளைத் தமிழ்**

இடம்: அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி கோயில்
காலம்: 10 - 02 - 98 செவ்வாய்க்கிழமை காலை 9 - 30 மணி

தலைவர்:- திரு. ந. சிவகடாட்சம் (அதிபர் யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)
வெளியீட்டுரை: கவிஞர் சோ. பத்மநாதன் (அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை)
நயப்புரை:- கலாநிதி இ. பாலசுந்தரம் சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(53234) - வெளியீட்டுக் குழுவினர்

உ

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்
தொண்டமானாறு

## தைப்பூசதின விழா

நிகழும் ஈசுர வருட தை மீ 28 ஆம் திகதி (10—02—98) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் விசேட அபிஷேகம் நடைபெற்று முருகப்பெருமான் இடப வாகனத்தில் வீதிவலம் வந்தருளுவார்.

தருமரத்தினஐயர் மகேந்திரன்
ஆலய உரிமையாளர்

[53214]

## யா/ உடுவில் அ. மி. த. க. பாடசாலை

1997 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபடைந்த

| | | |
|---|---|---|
| சி. கோமதி | - | 117 |
| கு. சர்மிளா | - | 106 |
| ஜெ. கோபிநாத் | - | 98 |
| கு. கல்யாணி | - | 98 |

ஆகியமாணவர்களையும், இம்மாணவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களையும், அதிபரையும் பாராட்டி, வாழ்த்தி நன்றி கூறுகிறோம்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.

(சி/2832)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 12 – 05 – 1946



இறப்பு: 10 – 01 – 1998

**அமரர் மாணிக்கம் அந்தோனிப்பிள்ளை**
[சாரதி]

மரணமும் பாவமும் வென்றவனே!
மனுக்குலம் காத்த மாதவனே!
மரித்தவர் தஞ்சம் ஆகிடுவாய்;
மாண்புயர் வானில் சேர்த்திடுவாய்.

புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரன், மருமகன், பேரப்பிள்ளைகள்.

கோப்பாய் மத்தி, கோப்பாய்.

[53061]

## பொலீஸார் மீது ஊர்காவலர் கிரனேட் வீச்சு

மட்டக்களப்பு, பெப் 9

ஏறாவூர் பொலிஸ் காவல் நிலையத்தில் கடமையில் இருந்த பொலீஸார் ஒருவர் மீது ஊர்காவல்படை வீரர் ஒருவர் கடந்த வெள்ளியன்று கிரனேட் வீசினார்.

எனினும் பொலீஸார் காயமின்றித் தப்பினார்.

இச் சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. (ஐ உ)

## பருத்தித்துறை நூலகம் இடம் மாற்றம்

வடமராட்சி, பெப். 9

பருத்தித்துறை பொதுநூலகம் நாலாம் குறுக்குத் தெருச் சந்தியிலுள்ள தனியார் வீடொன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. சிவன் கோயிலுக்கு அருகில் இயங்கி வந்த இந்நூலகத்தில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப் படவிருப்பதாலேயே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந் நூலகத்தின் திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன. (ஐ-173)

## நெடுந்தீவில் புதிய வீதி திறப்பு

சுதந்திரப்பொன் விழாவை முன்னிட்டு நெடுந்தீவில் புதிய வீதி ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

மீனவர்களின் வசதி கருதி மின்சார நிலையத்திற்கு அண்மையில் பிரதான வீதியில் இருந்து மீனவர் குடியிருப்புக்குச் செல்லக் கூடியதாக அமைக்கப்பட்ட இந்த வீதியை பிரசைகள் குழுத் தலைவர் ம. எற்வேட் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நெடுந்தீவுப் பொறுப்பாளர் மோகன், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும் முன்னாள் விசேட ஆணையாளருமான எஸ். பி. அருளப்பு, கிராம அலுவலர் ப. கதிரேசு, க. மரியாம்பிள்ளை உட்படப்பலர் கலந்து கொண்டனர். (ஐ-111)

## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
1996/ 97 கல்வியாண்டு
விஞ்ஞானபீடம்

1996/97 கல்வியாண்டு சகல விஞ்ஞானபீட மாணவர்களுக்கும் 1998-03-30 ஆம் திகதி விரிவுரைகள் ஆரம்பமாகும்.

1996 / 97, 1997 / 98 கல்வியாண்டு புதிய மாணவர்களுக்கான அடிப்படை கணனி கற்கை நெறிகளும், ஆங்கில கற்கை நெறியும் 1998-03-02 தொடக்கம் 1998 - 03 - 26 வரை முறையே காலையும் மாலையும் நடைபெறும்.

கணனி திறமைகாண் பரீட்சை 1998 - 03 - 27 ஆம் திகதி நடைபெறும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
1998-03-07.

(ஐ-2828)

## கர்ப்பிணிப் பெண் தீக்காயம்

யாழ்ப்பாணம், பெப். 9

குடும்பத்தகராறு காரணமாக தனக்குத் தானே தீ மூட்டி உடலின் பெரும்பாலான பகுதிகள் எரிந்து படுகாயமடைந்த நிலையில் இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன் தினம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சனி நண்பகல் இடம் பெற்ற இச் சம்பவத்தில் மன்னிருகரம் மதிவதனி [வயது 23] என்ற நான்கு மாதக் கர்ப்பிணிப் பெண்ணே எரிகாயங்களுக்குள்ளானவராவார். (ஐ-15)

நாளை!
POYA DAY
**மாதாந்த பயிற்சிப் பரீட்சை**
(ஆண்டு 2 முதல் 11 வரை)
★ எமது நிறுவனத்தில் கற்கின்ற கற்காத அனைத்து மாணவர்களும் தோற்றலாம்.
★ இப்பரீட்சை இலங்கை பூராவும் ஒரே நேரத்தில் நடத்தப்படுகிறது.
மேலதிக விபரங்களுக்கு:
BOND யாழ். நகர், த. பெ. இ. 140, கொழும்பு - 6
(53236)

## பாராட்டுகின்றோம்

யா/ சாவகச்சேரி
றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை
ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை -1997
சித்தியடைந்தோர் விவரம்:

செல்வன் ஜெ. அருணோதயன்
செல்வி உ. சுலக்சனா
செல்வன் டே. நெவில்தேவசேயன்
செல்வன் இ. ஜசிந்தன்

இம் மாணவர்களையும், இவர்களுக்கு உறுதுணையாக இருந்து கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் மனமாரப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
நலன்விரும்பிகள்.

(இ/2840)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்
5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை -1997
சித்தியடைந்தோர் விவரம்
ச. சிவந்தன் - 107 புள்ளி

இவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் இவரை மிகவும் ஊக்கமளித்து கற்பித்த ஆசிரியர்களையும், அதிபரையும் மனமார வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.
யா/ சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்.

(53206)

## வாழ்த்துகின்றோம்

யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக இன்று சத்தியம் பிரமாணம் செய்யும்



**உயர்திரு. இளையவன் வல்லிபுரம்**
(ஓய்வு பெற்ற அதிபர்)
அவர்களை
இளமை குன்றாச் சேவையிலீடுபட வாழ்த்துகின்றோம்.

— நிர்வாகிகள் —
வளர்மதி ச. ச. நிலையம்,
விவசாய சம்மேளனம்,
கிராம அபிவிருத்திச் சபை,
மானிப்பாய்.

[53172]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## போர்க் குணம் மாறாதா?

முப்படைகள் மற்றும் பொலிஸிலிருந்து விட்டுவிட்டு ஓடியவர்களை மீண்டும் அவற்றில் வந்து இணையுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்துள்ளார்.

இது சுதந்திரப் பொன் விழா ஆண்டு. இந்தக் காலத்தில் நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாக்க வேண்டும். அதன் பொருட்டு புலிகளை எதிர்த்துப் போராடி அவர்களை தோல்வி அடையச் செய்ய வேண்டும். ஆகையால் ஆயுதப் படைகள் மற்றும் பொலீஸிலிருந்து வெளியேறியவர்கள் உடனடியாக மீள அவற்றில் சேர்ந்து கொள்ள வேண்டும் — என்பது ஜனாதிபதி விடுத்திருக்கும் அழைப்பு.

ஜனாதிபதி வெறும் அழைப்போடு மட்டும் நிற்கவில்லை. சேவைக்குத் திரும்புவோரை விசாரணையோ, தண்டனையோ இன்றி மீண்டும் சேவையில் அமர்த்துமாறும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

1990 ஆம் ஆண்டில் அரசு — விடுதலைப் புலிகள் போர் வலுவடைந்ததில் இருந்து ஆயுதப் படைகளை விட்டு விலகியவர்களை மீண்டும் வந்து சேவையில் இணையுமாறு ஏற்கனவே பல தடவைகள் இவ்வாறு அழைப்புகள் விடப்பட்டதுண்டு.

இப்போது அழைப்பு பெரிய இடத்திலிருந்து விடுக்கப்பட்டுள்ளது. பழைய தோல்விகளின் அனுபவத்தில் இம்முறை ஜனாதிபதி முயன்று பார்க்கின்றார். உயிருக்கு அஞ்சி ஓடியவர்கள் மீண்டும் கொலைக்களத்தில் வந்து தலையை வைப்பார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அது நிற்க.

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காணப்போவதாக வாக்குறுதி அளித்து, மக்களின் வாக்குகளை அள்ளிக் கொண்டு, பதவிக்கு வந்தவர் ஜனாதிபதி மக்களையும் அழித்து நாட்டையும் அழித்து நாசமாக்கும் போரை மேலும் தீவிரமாக்க ஈனக்குரல் எழுப்புகிறார் இப்போது!

1995இல் அரசு— விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சு முறிவடைந்த கையோடும், ஒரு சிறிய குழு இந்த நாட்டுக்குச் சவால் விடுவதை சுயகௌரவம் உள்ள ஓர் அரசு பார்த்துக் கொண்டிருக்க முடியாது— என்று போர்க்குணம் பூண்டவர் ஜனாதிபதி.

அதேவேளையில், விடுதலைப் புலிகள் சமீபத்தில் அடுத்தடுத்து நடத்திய குண்டு மற்றும் இராணுவத் தாக்குதல்களைக் கண்டு ஜனாதிபதி உணர்ச்சிவசப்பட்டு ஆவேசம் அடைந்திருப்பதைக் காணமுடிகிறது. விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கூறிக்கொண்டும், அவர்களை அழித்து சமாதானத்தைக் கொண்டு வரப்போவதாகச் சொல்லிக் கொண்டும் தாமும் போர்வெறி படைத்தவர்போல நடந்து கொள்வது எந்த வகையிலும் பொருந்தாது.

போர் கொடுமையானது; அதனை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை உண்டாக்கப் போவதாகச் சொல்லி வரும் ஜனாதிபதி, அடிக்கடி உணர்ச்சி வசப்பட்டு போர் வெறி மிகுந்தவராக மாறுவது நாட்டை அழிவுக்கே இட்டுச் செல்லும்.

சமாதானத்துக்கான கதவுகளை மூடிவிட்டு போர் வழியில் நடப்பதால் நாட்டுக்கும் மக்களுக்கும் உண்டாகக்கூடிய அழிவுகளை எண்ணிப்பார்க்க வேண்டும்.

போர்க் குணத்தைக் களைந்து மக்கள் நலன் காக்கும் தலைவியாக சமாதானத்தைக் கொண்டு வரும் தலைவியாக ஜனாதிபதி விளங்கவேண்டும் என்றே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்.

அரசியல் தீர்வு யோசனைகள்:

# ஐ. தே. கவின் நிலைப்பாடு கவலை அளிக்கின்றது

## தமிழ் - முஸ்லிம் தலைவர்கள் அறிக்கை

கொழும்பு, பெப். 9

அரசியல் தீர்வு யோசனைகள் தொடர்பாக அண்மையில் ஐ. தே. க. உறுப்பினர்கள் பகிரங்கமாக விடுத்துள்ள அறிக்கைகள் எம்மை குழப்ப நிலைக்கு தள்ளியுள்ளதுடன் கவலையடையவும் செய்துள்ளன என்று தமிழ், முஸ்லிம் கட்சித்தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப், இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம், புளொட் தலைவர் த. சித்தார்த்தன் ஆகியோர் கூட்டாக ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளனர்.

அரசின் தீர்வுயோசனையை நிராகரித்துள்ள ஐ. தே. க. இன்று வரை மாற்று யோசனைகள் எதனையும் முன்வைக்கவில்லை. மாறாக மத்தியில் அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான தனது கருத்துக்களையே விடுத்துள்ளது.

இது விடயத்தில் ஆழமாக ஆராய வேண்டியுள்ளது. எனினும் பிராந்திய சுயாட்சிக்குப்பதிலாக மத்தியில் அதிகாரம் பகிரப்படுவதை ஒரு மாற்றீடாக எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆகையால் நாடாளுமன்றத்தில் அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகள் தொடர்பாக தனது புதிய யோசனைகளை ஐ. தே. க. சமர்ப்பிக்க வேண்டும் என்று நாம் கோருகின்றோம் —

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஷெல் வீச்சில் தந்தை பலி 5 வயது மகன் காயம்

மட்டக்களப்பு, பெப். 9

மட்டக்களப்பு வாழைச்சேனையில் கடந்த வெள்ளி இரவு வீடொன்றில் ஷெல் வீழ்ந்து கே. தயாளன் (வயது 30) என்ற தச்சுத் தொழிலாளி கொல்லப்பட்டார்.

வாழைச்சேனைப் பொலீஸ் நிலையத்திலிருந்து ஷெல் ஏவப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

இச் சம்பவத்தின் போது அவரது மடியில் உறங்கிக் கொண்டிருந்த 5 வயதுக் குழந்தை காயமடைந்தது. (இ-21)

## இளம் பெண்ணை பாம்பு தீண்டியது

யாழ்ப்பாணம், பெப். 9

விறகு பொறுக்கச் சென்ற இளம் பெண்ணை பாம்பு தீண்டியது.

நேற்றுக் காலை கோண்டாவில் வடக்கில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கனகேஸ்வரநாயகம் தாரணி (வயது 18) என்ற பெண்ணே பாம்பினால் கடியுண்டவர் ஆவார்.

அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டார். (இ-139)

## அடையாள அணிவகுப்பு

கொழும்பு, பெப். 9

திருகோணமலை தம்பலகமம் பொக்குறுனியில் பொலீஸ் காவல் நிலையம் ஒன்றில் வைத்து எழுடுத் தமிழர் சுட்டுக்கொலைப்பட்ட சம்பவம் தொடர்பாக அடையாள அணிவகுப்பு ஒன்றை நடத்துவதற்கு திருகோணமலை நீதிபதி பி. சுவர்ணராஜ் உத்தரவிட்டுள்ளார்.

எதிர்வரும் 11ஆம், 12ஆம், 13 ஆம் திகதிகளில் இந்த அடையாள அணிவகுப்பு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## வன்னிப் பகுதியில் மீண்டும் போக்குவரத்து ஆரம்பம்

வன்னியில் இராணுவக்கட்டுப்பாடு உள்ள பகுதிக்கும் கட்டுப்பாடு அற்ற பகுதிக்கும் இடையில் கடந்த சில நாள்களாக தடைப்பட்டிருந்த பயணிகள் போக்குவரத்து நேற்று முன்தினம் மீண்டும் வழமைக்குத் திரும்பியது.

சுதந்திர தினப் பாதுகாப்பு நடவடிக்கைகள், தலதா மாளிகைக் குண்டு வெடிப்பு ஆகிய காரணங்களால் தடைப்பட்டிருந்த பயணிகள் போக்குவரத்தே வழமைக்குத் திரும்பியுள்ளது.

நேற்றுமுன்தினம் ஆயிரத்து 200 பேர் இராணுவக் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருகை தந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-164-9)

## பிக்குகளின் போக்கு வியப்பைத் தருகிறது

### அனுரா பண்டாரநாயக்கா கூறுகிறார்

கொழும்பு, பெப். 9

பௌத்த மத வழிபாட்டுத் தலங்கள் மீது குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றபோது வாராமுகமாக இருந்த பிக்குகள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த பதவி விலகப்போவதாக அறிவித்ததும் தீக்குளிக்க முயல்வது வியப்பாக இருக்கிறது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அனுரா பண்டாரநாயக்கா சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இலங்கையின் வரலாற்றில் என்றுமே பிக்குகள் தீக்குளித்ததில்லை. யுத்தம் மிக விரைவில் முடிவுக்கு வரும் என்று அரசு கூறிவருகிறது. ஆனால் கடந்த 3 வருடங்களாக யுத்தம் உக்கிரமடைந்து வருகின்றது.

மக்கள் நலன்பேணக்கூடிய வகையில் அரசாங்கம் எந்த ஒரு நடவடிக்கையையும் எடுத்தபாடில்லை.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-7)

## தற்கொலைக் குண்டுதாரி நடந்தே அங்கு வந்தாராம்

### பொலீஸார் தெரிவிப்பு

கொம்பனித்தெரு குண்டு வெடிப்புச் சூத்திரதாரியென கருதப்படும் தற்கொலைப் பெண் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு நடந்தே வந்துள்ளார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு வாகரையைச் சேர்ந்த கணேசன் இந்திராணி என இனங்காணப்பட்டுள்ள இந்தப் பெண் கடந்த முதலாம் திகதி முதல் கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள லொட்ஜ் ஒன்றில் தங்கியிருந்தார் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர் (இ-3)

## கண்டி சிறைச்சாலையை புலிகள் தாக்கலாமாம்!

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த 25 கடற்புலிகள் கண்டியிலுள்ள போகம்பர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்களை மீட்பதற்காக விடுதலைப் புலிகள் அச்சிறைச்சாலை மீது தாக்குதலை மேற்கொள்ளக்கூடும் எனவும் கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

நீண்ட காலமாக இந்த சிறைச்சாலையில் கடற்புலிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். போகம்பர சிறைச்சாலை போன்ற பிரதான வீதிகளில் அமைந்துள்ள இலக்குகள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் தற்போது அதிகரித்துள்ளன என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-10)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, பெப் 9

வியாபாரிமூலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் (நாச்சிமார் கோயில்) கோயில் சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகமும், ஸ்ரீசக்கரேஸ்வரி பிரதிஷ்டா பெரும் சாந்தி விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை தைப்பூசதினத்தன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

இக்கும்பாபிஷேகத்தை இன்பர்சிட்டி சித்தி விநாயகர் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ மகாகணபதி சிவானந்தராஜாக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்தி வைப்பார்.

சிறப்பு அருளாசி உரைகளை அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபைத் தலைவர் சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர், புற்றளை சித்தி விநாயகர் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ சோ. விஜயரத்தினக்குருக்கள் ஆகியோர் நிகழ்த்துவர். [ஐ-173]

★ ★ ★

உரும்பிராய் அருள்மிகு ஸ்ரீ சிதம்பரசுப்பிரமணிய சுவாமி கோயிலின் தேர்த் திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9.45க்கு நடைபெறும். நாளை காலை 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். [ஐ-30]

★ ★ ★

நீர்வை — வடகோவை அருள்மிகு ஸ்ரீசாந்தி துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 108 கலச சங்காபிஷேகத்துடன் முடிவடையவுள்ளது. நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

சமய அறிவுப் போட்டியில் வெற்றிபெற்ற சிறுவர்களுக்கு அன்றைய தினம் பரிசு வழங்கப்படும் என ஆலய அறங்காவலர் த. செல்லையா தெரிவித்துள்ளார். [ஐ-80]

★ ★ ★

நீராவியடி அருள்மிகு ஸ்ரீஜெய வீரகத்தி விநாயகர் கோயிலில் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு 108 கலச சங்காபிஷேகம் நடைபெற்று நண்பகல் 12.30 மணிக்கு மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

ஆலய பிரதமகுரு, சிவப்பிரம்மஸ்ரீ சு. ஸ்ரீதரக்குருக்கள் கிரியைகளை நடத்தி வைப்பார். [ஐ-30]

★ ★ ★

தொண்டமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தில் தைப்பூச தினவிழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும். முற்பகல் 10 மணிக்கு விஷேட அபிஷேகம் நடைபெற்று முருகப்பெருமான் இடபவாகனத்தில் வீதிவலம்வந்தருளுவார்.

★ ★ ★

கோண்டாவில் வடக்கு சாமுண்டாதேவி சமேதஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா பஞ்சகுண்ட மஹா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை நண்பகல் 10.15 மணிக்கு நடைபெறவுள்ளது. [ஐ-15]

★ ★ ★

சங்கானை மாவடி ஞான வைரவர்தேவஸ்தான பாலஸ்தாபனம் இன்று திங்கட்கிழமை காலை 7 மணி முதல் நடைபெறும். [ஐ-15]

★ ★ ★

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயில் தைப்பூச விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு ஆயிரத்து எட்டு சங்காபிஷேகத்துடன் நடைபெறும். [ஐ-4]

★ ★ ★

ஆச்சுவேலி வடக்கு அருள்மிகு சித்திரவேலாயுதசுவாமி கோயிலின் தைப்பூசத் திருவிழா நாளை செவ்வாய் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நடைபெறும்.

★ ★ ★

கந்தரோடை அருள்மிகு வற்றாக்கைப்பதி ஸ்ரீ விசாலாட்சி அம்பிகாதேவி சமேத விஸ்வநாதப் பெருமான் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை தைப்பூச தினத்தை முன்னிட்டு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளன. [இ-8]

## நாளை

**தை 28**

செவ்வாய்க்கிழமை

திதி: சதுர்த்தசி பிற்பகல் 3.33 வரை.

நட்சத்திரம்: பூசம் பிற்பகல் 5.28 வரை

தைப்பூசம்

சுபநேரம்: 11.04-12.34

ராகுகாலம்: 3.34-5.04

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)
411, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.

## கணிதப் பரீட்சை முடிவுகள் - 1

| | | | |
|---|---|---|---|
| ஆண்டு 11: | S. மோகனஜீவ் | J.H.C. | 96% |
| | K. யதுகுலன் | J.H.C. | 92% |
| ஆண்டு 10: | N. கல்யாணி | V.G.H.S. | 96% |
| | P. சிவராணி | V.G.H.S. | 95% |
| ஆண்டு 9: | K. ரிஷிகேசன் | J.H.C. | 94% |
| | S. பகீரதன் | J.H.C. | 89% |
| ஆண்டு 8: | V.P. மோகன்ராஜ் | J.H.C. | 80% |
| | T. துளசி | V.G.H.S. | 79% |
| ஆண்டு 7: | R. சுவஸ்திகா | V.G.H.S. | 100% |
| | S. சிவகணேசன் | J.H.C. | 96% |
| ஆண்டு 6: | K. தர்சனா | C.G.C. | 100% |
| | S. யசிந்தாயினி | V.G.H.S. | 94% |

கணித ஆசிரியர்:
திரு. B.P. பாஸ்கரன்

(53246)



# Radio & Electronics

புதிய பயிற்சி நெறி
ஆரம்பம்: 14 - 02 - 1998

★ இலகு விரிவுரைகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சிகள்
★ தவணை முறைக் கட்டணங்கள்

விபரங்களுக்கு:

NORTH CEYLON
TECHNICAL INSTITUTE
29, 2nd Cross Street,
Jaffna,

(53199)


# விமானப்படை நவீன மயப்படும்

கொழும்பு, பெப். 9

21 ஆம் நூற்றாண்டின் தேவைகளுக்கு முகம் கொடுக்கும் வகையில் விமானப்படை நவீனமயப்படுத்தப்படவிருக்கிறது.

விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க இதனைத் தெரிவித்தார்.

திட்டமிடப்பட்ட முறையில் தொழில்நுட்ப அம்சங்கள் நவீனமயப்படுத்தப்படும். நவீன இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படும்.

தற்போதைய தேவைகளுக்கு ஏற்ற வகையில் நவீன விமானங்கள் கொள்வனவு செய்யப்படும்.

தற்போது தருவிக்கப்பட்டுள்ள நவீன விமானங்கள் மூலம் வடக்கு - கிழக்கில் விமானப்படை நல்ல பங்களிப்பைச் செய்கிறது.

கடல் பகுதி பாதுகாப்பில் 24 மணி நேர கண்காணிப்புப் பணியில் விமானப்படை ஈடுபட்டுள்ளது.

தற்சமயம் விமானப்படையில் 160 விமானிகளே உள்ளனர். ஆனால் 250 பேர் விமானப்படைக்குத் தேவையாக உள்ளனர்.

இலங்கையில் ஆண்டு ஒன்றுக்கு 16 பேருக்கு மட்டுமே பயிற்சி அளிக்க வசதி உள்ளது. ஆகவே கூடுதல் ஆள்களைத் தெரிவுசெய்து வெளிநாடுகளில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது — இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-3-9)

# குருநாகல் பகுதியில் ஆயுததொழிற்சாலை

கொழும்பு, பெப். 9

குருநாகல் மாவட்டத்தில் ஒய்வுபெற்ற மாலுமி ஒருவர் நடத்தி வந்ததாகக் கூறப்படும் இரு ஆயுதத் தொழிற்சாலைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக 17 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஒட்டுக்குளம், அழுனுவல பகுதிகளில் இந்த ஆயுதத் தொழிற்சாலைகள் இயங்கி வந்தன என்று கூறப்படுகிறது.

இந்தத் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட நூற்றுக் கணக்கான துப்பாக்கிகள் நாட்டின் பல பகுதிகளிலும் விற்பனை செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-9)

# வேலைநிறுத்தம்: ஜனாதிபதியுடன் முக்கிய சந்திப்பு

கொழும்பு, பெப். 9

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களின் சம்பளக் கோரிக்கை குறித்துதீர்வுகாண நேற்று முக்கிய சந்திப்புஒன்று ஜனாதிபதியுடன் இடம்பெற்றது.

தொழில் அமைச்சர்ஜோன் செனவிரத்ன, அமைச்சர் தொண்டமான் ஆகியோர் இச்பேச்சுக்களில் பங்குபற்றினர். அடுத்த கட்டப்பேச்சுக்கள் நாளை நடைபெறும்.

வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஜனாதிபதி பலதரப்பினருடனும் பேச்சு நடத்தி வருகிறார்.

ஆனால் வேலை நிறுத்தம் தொடர்கிறது.

(இ-3)

# கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

நிலைமை குறித்து வவுனியா செய்தியாளர் மாணிக்கவாசகர் பி. பி. சிக்கு நேற்றுத் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சியில் இன்னும் சண்டைகள் நடைபெறுவதாக அங்கிருந்து கிடைக்கின்ற தகவல்கள்தெரிவிக்கின்றன.

கடந்த முதலாம் திகதி கிளிநொச்சித் தளத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் மூலம் அந்த நகரையும் அந்த நகரைச் சூழ்ந்த பகுதிகளையும் விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்தனர்.

கொழும்பிலுள்ள அதிகாரிகள் கிளிநொச்சியின் தென் பகுதிகளை விட்டு தாம் பின் வாங்கியிருப்பதாகத் தெரிவித்து அதனை உறுதிப்படுத்தியிருந்தனர்.

இப்பொழுது கிளிநொச்சி நகரையும் அதனைச் சூழ்ந்த பகுதிகளையும் புலிகளிடம் இருந்து கைப்பற்றுவதற்காக இராணுவத்தினர் பெரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 3 மணி வரை காடிப்போக்கிலிருந்து தென்பகுதி நோக்கி அதாவது கிளிநொச்சி நகரை நோக்கிப் படையினர் இராணுவ டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் முன்னேற முயன்றபோது பெரும் சண்டை மூண்டது. இச் சண்டையின் போது அவர்களால் முன்னேற முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருந்தது. மீண்டும் அன்று மாலை 4-40மணியளவில்ஆரம்பமான சண்டை ஒரு மணித்தியாலம் தொடர்ந்து நடைபெற்றது. இச் சண்டையில தமது தரப்பில் 14 புலிகள் உயிரிழந்ததாக அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

அத்துடன் இராணுவத் தரப்பில் பலத்த சேதத்தை ஏற்படுத்தியதாகவும், படையினரின் சடலம் ஒன்றையும், அவர்களிடம் இருந்து ஆயுதங்கள் சிலவற்றையும், இராணுவ தளபாடங்களையும் தாம் கைப்பற்றியுள்ளதாகவும் அவர்கள் அறிவித்துள்ளார்கள்

இச்சண்டையின் காரணமாக விமானத் தாக்குதல்களும், ஷெல் வீச்சுக்களும், அத்துடன் ஹெலித் தாக்குதல்களும் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன.

இப்படித் தெரிவித்தார்.

(இ-9-3)

# குண்டை...

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த 6 ஆம் திகதி மீசாலை, சரசாலைப்பகுதிகளில் புலிகள் தவறான தகவல்களை வெளியிட்டிருந்தனர்.

மீசாலை வடபிரதேசத்தில் படையினரின் இரு சடலங்கள் கிடப்பதாக பாதுகாப்புப் படையினருக்குத் தகவல் கிடைத்தது.

இந்தச் செய்தியைக் கேட்ட படையினர் சில மணி நேரங்களின் பின்னர் 521ஆம் படையணியுடனும், 522ஆம் படையணியுடனும் சேர்ந்து அந்தப் பகுதியை இரு பக்கத்தால் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

இதேவேளை அப்பகுதியில் மறைந்திருந்த மீரன், பொட்டு கண்ணன் ஆகிய இரு புலிகள் உறுப்பினர்களும் குண்டு ஒன்றை வெடிக்க வைத்து தற்கொலை செய்தனர்.

இவர்கள் இராணுவ, அரசியல்துறைத் தலைவர்கள் என்று விசாரணையில் தெரிய வந்தது — இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-117)

# ரோந்து சென்ற...

(முதலாம் பக்கத் தொடர்)

★ ரி 56 ப மொடல் துப்பாக்கிகள் — 4
★ ரவைக்கூடுகள் — 12
★ எம். 4 குண்டுகள் — 4
★ நடுத்தர ரவைகள் — 360
★ இராணுவத் தொப்பி — 1
★ ரவைத் தாங்கி அணி — 1

(இ-9-3)

# பிரேத பரிசோதனை...

(முதலாம் பக்கத் தொடர்)

விழ்ந்து உருண்டு ஓடியதாம்.

பதற்றம் அடைந்த அவர்கள் வெளியே ஓடினர்.

பின்னர் பொலீஸார் அந்தப் பொருளைப் பார்த்து கைக்குண்டு என்று தெரிவித்ததையடுத்து, இராணுவத்தினர் அங்கு அழைக்கப்பட்டு குண்டு எடுத்துச் செல்லப்பட்டது.

அதன் பின்னர் பிரேத பரிசோதனை நடைபெற்றது.

(இ-3-139)


# மணமக்களை வாழ்த்துகிறோம்

காரைநகர் மருதடியைச் சேர்ந்த நாதஸ்வர வித்துவான்
சுப்பையாக்கம்பர் மந்திரமூர்த்தி
அவர்களுக்கும் நாச்சிமார் கோயிலடி தவில் வித்துவான்
குகானந்தன் ஹம்சானந்தி
அவர்களுக்கும்
08-02-98 நடந்தேறிய திருமணத்தில் மணமக்கள் பல்கலையும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்
காரைநகர் நீலிப்பந்தனை
இளைஞர்கள்

(53221)



# வாழ்த்துகின்றோம்

சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ள
எமது ஆலயத் தலைவர்
உயர்திரு. சீ.வி.கே. சிவஞானம் அவர்களை
மனமார வாழ்த்துகின்றோம்.

நல்லூர் வடக்கு சந்திரசேகரப்
பிள்ளையார் தேவஸ்தானம்,
நல்லூர் வடக்கு சனசமூக நிலையம்,
விநாயகர் விளையாட்டுக் கழகம்,
ஊர்வாழ் மக்கள்.

[53200]



# கருத்தரங்கு

பொருள்!
பெற்றோரும் நாளைய குழந்தைகளும்

கருத்துரை வழங்குவோர்:
திருமதி பாலாம்பிகை சுப்பிரமணியம்
B.A. Dip In Ed.
(சேவைக்கால ஆசிரியர், ஆலோசகர்.)
அருட்திரு. எஸ். ஜே. இராஜநாயகம்
(உளவியலாளர்)

காலம்: 10 - 02 - 1998 செவ்வாய்க்கிழமை
நேரம்: பிற்பகல் 3 . 00 மணி
இடம்: "அகவொளி"
குடும்ப வளத்துணை நிலையம்,
131, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[53197] இயக்குநர்



எமது புதிய
வெளியீடு!

விக்னேஸ்
பிரியாராமன்
நடித்த
'சாணக்கிய வம்சம்'

CD வெளியீடு

★ மூவேந்தர்
★ உதவிக்கு வரலாமா
★ நாமிருவர் நமக்கிருவர்
★ பொன் மனம்
★ மறுமலர்ச்சி
★ கிழக்கு மேற்கு

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்

(சி/2847)



# தைப்பூச விழா

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி
கோயிலில் தைப்பூச விழாவை முன்னிட்டு
10 - 02 - 1998 செவ்வாய்க்கிழமை
காலை 7.00 மணி தொடக்கம்

1008 சங்காபிஷேகம்
விசேட பூசை
சுவாமி திருவீதியுலா

ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. அவ்வேளையில்
திரு. T. உதயசங்கர் குழுவினரின்
நாதஸ்வர கான மழையும் இடம்பெறும்.
அனைவரும் வருக, அருளமுதம் பெறுக.

உபயகாரரும்
(சி/2839) ஆலய பரிபாலன சபையினரும்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 09-02-98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org